வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 342 | பக்கங்கள் : 16




# வெளிநாட்டிலுள்ள பணத்தை மீட்க அமெரிக்கா தொழில்நுட்ப உதவி!

## உதவி இராஜாங்கச் செயலர் உறுதி



கொழும்பு, டிசெம்பர் 08

தற்போதைய அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு எந்தநேரத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும், நாட்டுக்கு வெளியில் கொண்டுச் செல்லப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவிச் இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் உதவி இராஜாங்க செயலாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மற்றும் தெற்கு, மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவிச் இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ ஆகியோருக்கு இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் தொடர்பில்

15

# நடைபெறாத தேர்தலுக்காக 72 கோடி ரூபா வீண் விரயம்!

கொழும்பு, டிசெ. 08

இந்த வருட தொடக்கத்தில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு 72 கோடி ரூபா வீண் விரயம் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த செய்தியில்-

உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக இதுவரை 72 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டும் பலன் இல்லாமல் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

15

# உள்ளூராட்சித் தேர்தல் பின்தள்ளிப்போகிறது!

## சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற முடிவு

கொழும்பு, டிசெ. 08

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகள் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும், அது பிற்போடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல்.

15

# மனித உரிமைகளை பாதுகாக்க இலங்கை தொடர்ந்தும் ஆதரவு!

## கூறுகிறது அமெரிக்கா

கொழும்பு, டிசெ. 08

ஜனநாயக ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ தலைமையிலான தூதுக்குழுவினருக்கும், இலங்கையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

15

# உருவானது குறைந்த காற்றழுத்த தாழ்வு

கொழும்பு,டிசெ. 08

தென்கிழக்கு வங்கக் கடலில் நேற்று காலை 08.30 அளவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது மேலும் வலுவடைந்து அடுத்த 24 மணித்தியாலத்தில் மேற்கு - வடமேற்கு நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது டிசம்பர் 11 ஆம் திகதி தென் மேற்கு வங்காள

19

# அரச ஊழியரை பணிநீக்கம் செய்யும் திட்டம் கிடையாது!

## அரசாங்கம் மறுப்பு

கொழும்பு, டிசெ. 08

பொது சேவையில், பணியாளர்களை பணிநீக்கம் செய்யும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் மாறாக உற்பத்தியை மேம்படுத்துவதில், அரசாங்கம் கவனம் செலுத்தும் எனவும் அரசு தெரிவித்துள்ளது.

அரச வருமானத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக அரச சேவையை குறைக்க வேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலை யில், பொது நிர்வாக அமைச்சர்

15

# புலிகள் அமைப்பின் சின்னங்களுடன் நினைவேந்தியிருந்தால் நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 08

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியான புலிக்கொடி மற்றும் புலிகள் அமைப்புக்குரிய சின்னங்களுடன் நினைவேந்தல் நடத்தப்பட்டிருந்தால் உரிய விசாரணைகளின் பின்னர் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர் பில் ஊடகங்களுக்குக்

15

# 225 ரூபாவுக்கு அரிசி!

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு

கொழும்பு, டிசெ. 08

ஒரு கிலோ நாடு அரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபா சில்லறை விலைக்கும் விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக் ,அரிசி விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வர்த்தக,வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி வியாபாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே

15

# ஐ.தே.க. தலைமை பதவி சஜித் பிரேமதாஸவுக்கு!

## யோசனை முன்வைப்பு

கொழும்பு, டிசெ. 08

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டால் மாத்திரமே இரு தரப்பு இணைவு என்பது சாத்தியமாகும். இதற்கான விட்டுக்கொடுப்பை ரணில் விக்கிரமசிங்க செய்யாதவரை இணைவு என்பது சாத்தியப்படமாட்டாது என்று ஐக் கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

15

# விந்தன் கனகரத்தினம் ரெலோவிலிருந்து நீக்கம்!

வவுனியா, டிசெ. 08

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து விளக்கம் கோரி கடிதம் அனுப்புவதற்கு தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமை குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர்

15

# பழிவாங்கலை மேற்கொள்ளவே ஆட்சிக்கு வந்துள்ளது அநுர அரசு

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 08

தற்போதைய அரசாங்கம் பழிவாங்கலை மேற்கொள்வதற்காகவே ஆட்சிக்கு வந்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 பவுண் தங்க நகைகளை திருடி கொழும்பில் சொகுசு வாழ்க்கை!

## ஆயுதங்கள், கைக்குண்டு, பெருமளவு நகைகளுடன் பிரதான சந்தேகநபர் 2 வருட தேடலின் பின் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 08

**யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 300 பவுண் தங்க நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் நீண்ட காலமாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.**

இதன்போது, பெருமளவு நகைகள், ஆவணங்கள், திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கைக்குண்டு என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் பகுதி பொலிஸ் பிரிவுகளில் கடந்த 2 வருடங்களாக துவிச்சக்கரவண்டியில் முகத்தை மறைத்து சென்று நகைகளை திருடும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் நீண்ட காலமாக தேடப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் கொழும்பில் தலை மறைவாக இருந்த போது இந்திக்க தலைமையிலான யாழ்ப் பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

இதன்போது சந்தேக நபரின் மனைவி அங்கிருந்து தப்பியோடினார். சந்தேக நபரிடமிருந்து 90 பவுண் நகைகள் மீட்கப்பட்டதுடன், திருடிய நகைகளை விற்ற பணத்தில் சந்தேக நபர் கொழும்பில் சொகுசு வீடொன்றை அமைத்தமையும் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட நகைகளை வாங்கிய கொழும்பைச் சேர்ந்த மூன்று பேரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பிரதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை டிசெ. 30 ஆம் திகதி வரை தொடரும்

## புகையிரத திணைக்களத்திடம் பயணிகள் விசேட கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 08

குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையான சேவையை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளது.

இதுவரை காலமும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் மாத்திரம் இச் சேவையை வழங்கி வந்த கடுகதி ரயில் தற்போதைய பாடசாலை விடுமுறை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கைக்கு அமைவாக இம்மாதம் 30 ஆம் திகதி வரை தனது சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளது.

ஒவ்வொரு நாளும் அதிகாலை 5. 30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட ரயிலானது முற்பகல் 11: 15 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைந்து பின்னர் காங்கேசன்துறையிலிருந்து மதியம் 12. 34 இற்கு தனது சேவையை ஆரம்பிக்கும். இந்த ரயில் இரவு 7. 20 மணிக்கு மீண்டும் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடைகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிக்கும் ரயில் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் தனது பயணத்தை நிறைவு செய்கிறது. இருப்பினும் கல்கிஸை வரை பயணம் செய்யும் பயணிகள் புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மற்றுமொரு வாகனத்தின் ஊடாக பயணத்தை மேற்கொள்ள வேண்டிய சூழல் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதிகளவாக பயணம் செய்யும் பயணிகள் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளான வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கல்கிஸை ஆகிய பகுதிகளுக்கும் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

தொடர்ச்சியான சேவையை கல்கிஸை வரை வழங்குவதன் ஊடாகவே தம்மால் இலகுவாக பயணம் செய்ய முடியும் எனவும் அதனை நிவர்த்தி செய்வதற்கு புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். (எ)

# 'தமிழ் அறிவு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 08

காவேரி கலாமன்றம் மற்றும் தாய்நிலம் பதிப்பகம் இணைந்து நடத்தும் கவிஞர் க. பே. முத்தையா எழுதிய 'தமிழ் அறிவு' நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பட்டதாரி கற்கை நிலையம் - யாழ்ப்பாணக் கல்லூரியில் (யாழ். போதனா மருத்துவமனை முன்பாக) பேராசிரியர் எஸ். சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கவிஞர் க. பே. முத்தையா எழுதிய ஏழாவது படைப்பாக 'தமிழ் அறிவு' நூல் அமைந்துள்ளது. (எ-05)

# மாவீரர் வாரம் நினைவுகூரல் இரு இளைஞர்கள் வாக்குமூலம்

## யாழில் தொடரும் விசாரணை!

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்ப்பாணத்தில் மாவீரர் வார நிகழ்வுகளை அனுஷ்டித் தமை தொடர்பிலான விசார ணைகள் தொடர்ந்து முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

மாவீரர் வார காலப்பகுதியில் கொக்குவில் சிவசுப்பிரமணியர் முருகன் கோவிலடியில் மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் இரு இளைஞர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

மாவீரர் நாள் குறித்து முகநூலில் பதிவிட்டமை தொடர்பில் கடந்த 29ஆம் திகதி இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

இதேவேளை, வல்வெட்டித்துறை பகுதியில் புலிகளின் தலைவரின் பிறந்த நாளை கொண்டாடியமை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 06 பேரிடம் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலங்களை பெற்றுள்ளனர்.

அத்துடன் மாவீரர் நாள் மற்றும் புலிகளின் தலைவரின் பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்து, முகநூலில் பதிவிட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்த 06இற்கும் மேற்பட்ட இளைஞர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. (எ)

# அஸ்வெசும திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 08

நலன்புரி நன்மைகள் திட்டத்தின் (அஸ்வெசும) இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளன. எனவே, பின்வரும் நபர்கள் தமது விண்ணப்பங்களை தாம் தொடர்ச்சியாக வசிக்கும் நிரந்தர கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் நாளை 9 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க முடியும்.

01) அஸ்வெசும நலன்புரி நன்மைகள் தொடர்பில் இது வரை விண்ணப்பிக்காதவர்கள்.

02) முதலாம் கட்டத்தில் விண்ணப்பித்தும் வீடுகளுக்கு அலுவலர்கள் வருகை தந்து அவர்களால் தரவுகள் சேகரிக்கப்படாத நபர்கள் மற்றும் தகவல் சேகரிக்கப்பட்டும், நலன்புரி நன்மைகள் சபையின் தரவுத் தளத்தில் தகவல்கள் பதிவேற்றப்படாத நபர்கள்.

03)முதலாம் கட்டத்தில் அல்லது இரண்டாம் கட்டத்தில் ஆரம்ப விண்ணப்பம் கோரலின் போது நபர் ஒருவர் தாம் வசித்த கிராம உத்தியோகத்தர் பிரிவு அல்லது பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து மாற்றலாகி தற்போது வேறு கிராம உத்தியோகத்தர் பிரிவு அல்லது பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் சந்தர்ப்பத்தில் அவர் தற்போது வசிக்கும் தனது புதிய கிராம உத்தியோகத்தர் பிரிவு அல்லது பிரதேச செயலாளர் பிரிவில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

04)நலன்புரி நன்மைகள் திட்டத்தின் (அஸ்வெசும) இரண்டாம் கட்டத்தில் எண்ணீட்டு பணியானது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் இடம்பெறும் என நலன்புரி நன்மைகள் சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

05)நலன்புரி நன்மைகள் திட்டத்தின் (அஸ்வெசும) முதலாம் கட்டத்தில் கொடுப்பனவுக்காக தெரிவு செய்யப்படாமை தொடர்பான மனக்குறைகளை, அதற்கான விண்ணப்பத்தை தங்களது கிராம அலுவலர் அலுவலகம் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்று டிசெம்பர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அல்லது பிரதேச செயலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்களது மனக்குறைகளை தெரிவித்துக் கொள்ள முடியும்.

06)இத்திட்டம் தொடர்பான மேலதிக விளக்கங்களை தமது பிரதேச செயலக நலன்புரி நன்மைகள் சபை அலகினை தொடர்பு கொள்வதன் மூலம் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்க அதிபர், பொது மக்களுக்கு அறிவித்துள்ளார். (எ-05)

# யாழில் சிறு, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி





யாழ்ப்பாணம், டிசெ. 08

சிறு, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பொதியிடல் மற்றும் நிதிக்கையாளுகை தொடர்பில் இரண்டு நாட்கள் பயிற்சி நெறி யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் தலைமையுரையாற்றிய பதில் அரச அதிபர் கூறுகையில் -

பொருட்களுக்கான பொதியிடல் முறைமையானது ஆரம்ப காலங்களில் முறையாக அமைந்திருக்கவில்லை.

தற்போதும், சில உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது பொருட்களின் பொதியிடல் முறைமையானது மிகச் சிறப்பாக இல்லாமையானது என்னால் அவதானிக்கப் பட்டது.

சிறப்பான பொதியிடல் இல்லாததால் சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. பொருட்களின்பொதியிடல் மற்றும் தரம் சரியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடு மிக முக்கியமானது. அதனைச் சிறப்பாக செய்வதனூடாக முன்னேற்றத்தை அடைய முடியும்.

தொழில் முயற்சியாளர்கள் வங்கிகளில் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். அதற்கான முறைகள் பற்றியும் பயிற்சி நெறியில் வங்கி முகாமையாளரால் தெளிவுபடுத்தப்படும்"- என்றார். பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பொதியிடல் மற்றும் நிதிக்கையாளுகை தொடர்பாகவும், வங்கியில் கடன் பெற்றுக் கொள்வதற்கான வங்கி நடைமுறைகள் தொடர்பான விடயங்கள் இப்பயிற்சியின்போது தெளிவு படுத்தப்பட்டன.

இப்பயிற்சி நெறியில் வடக்கு மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிராந்திய முகாமையாளர், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தில் பலதரப்பினரின் பங்களிப்பு இன்றியமையாதது

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 08

**ஜனநாயகத்தில் பலதரப்பட்ட குரல்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிர்வாகம், பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதார செழிப்பு உள்ளிட்டவற்றுக்கு முன்னுரிமையளித்து இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதாக அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ மற்றும் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ, அமெரிக்க திறைசேரியின் உதவிச் செயலாளர் ரொபர்ட் காப்ரோத், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினருக்கு இடையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில், சமகால இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் அவதானம் செலுத்தியதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசீம், ரிஷாத் பதியுதீன், பழனி திகாம்பரம், அஜித் பி பெரேரா, முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜெயவர்த்தன மற்றும் எஸ். எம். மரிக்கார் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# அரிசி உற்பத்தி, கையிருப்பை நேரில் வந்து பார்வையிடுங்கள்

## வர்த்தக அமைச்சரின் கருத்துக்கு அரிசி ஆலை உரிமையாளர் பதிலடி

கொழும்பு, டிசெ. 08

தனது அரிசி உற்பத்தி மற்றும் கையிருப்பு தொடர்பில் நேரில் வருகைதந்து பார்வையிடுமாறு நிவ் ரத்ன அரிசி ஆலை உரிமையாளர் லங்கேஸ்வர மித்ரபால தெரிவித்துள்ளார்.

பாரிய அரிசி உற்பத்தியாளர்கள் கையிருப்புகளை மறைத்து வருவதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே லங்கேஸ்வர மித்ரபால மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(எ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மற்றுமொரு சொகுசு கார் கண்டுபிடிப்பு!

கொழும்பு, டிசெ. 08

சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு கார் ஒன்று சுங்க வருமான கண்காணிப்புப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 24 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொகுசு கார் ஒன்றே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது.

ஜப்பானில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கன்டெய்னரில் இருந்து இந்த கார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த இரண்டு மாதங்களில் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 200 வாகன உதிரிப் பாகங்கள் சுங்க வருமான கண்காணிப்புப் பிரிவினரால் நேற்றுச் சனிக்கிழமை ஊடகங்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டன. (எ)

# லொஹானுக்கு நாளைவரை விளக்கமறியல்

கொழும்பு, டிசெ. 08

மீண்டும் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை நாளை 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோர் பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அதனையடுத்து, மீண்டும் நேற்று முன்தினம் 6 ஆம் திகதி மதுபோதையில் வாகனம் செலுத்தி ஏற்படுத்திய விபத்தொன்று தொடர்பாக கொள்ளுப்பிட்டியில் வைத்து லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையிலேயே அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

### 14 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்:

# விடுதலை செய்யுமாறு கோரி தமிழகத்தில் நேற்று போராட்டம்

இராமேஸ்வரம், டிசெ. 08

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில், இலங்கை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட 14 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி மீனவர்களின் உறவினர்கள் மற்றும் மீனவர்கள் தங்கச்சிமடத்தில் நேற்றுப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த புதன்கிழமை மீன்பிடிக்க வந்து வியாழக்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து 14 இந்திய மீனவர்கள் இரு படகுகளுடன் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களையும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்த நிலையில் அவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மன்னார் நீதிவான் 14 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஈ. பி. டி. பி. வேட்பாளர் வீட்டின்மீது தாக்குதல்

## பொலிஸார் விசாரணை



சாய்ந்தமருது, டிசெ. 08

பாராளுமன்றத் தேர்தலில் ஈ. பி. டி. பி. சார்பில் போட்டியிட்ட அஹமட் லெப்பை அன்சாரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அன்சாரின் வீட்டின் மீது நள்ளிரவில் கழிவு ஒயில் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களை பதிவு செய்தனர்.

மேலும் இந்தச் சம்பவம் குறித்து அன்சார் கூறுகையில், “தனக்கு அண்மைக்காலமாக இனந்தெரியாத நபர்கள் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் செய்ததாகவும் பின்னர் இவ்வாறு வீட்டின் மீது மேற்கொண்ட கழிவு ஒயில் தாக்குதலில் வீட்டின் நுழைவாயில் உட்பட சுவர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதுதவிர முகநூலில் சில தவறான விடயங்களை உட்செலுத்தி சில நபர்கள் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வந்ததாகவும் இதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடாக தெரிவித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார். (எ)

# வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விட்டால் கோட்டாவின் நிலையே அநுரவுக்கு ஏற்படும்

## சபையில் எச்சரித்தார் திலித் ஜயவீர

தேசியத்தை இனவாதம் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. தேசியத்தை சிறந்த முறையில் அடையாளப்படுத்திக் கொண்டு அதற்கமைய செயல்படாவிடின் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் கோட்டாபய ராஜபக்ஷவின் நிலையே ஏற்படும் என சர்வஜன சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயல்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபட் [illegible] வழங்கிய அனைவருக்கும். தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயல்படுவோம். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கொள்கை பிரகடனத்தில் பல சிறந்த திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி 75 ஆண்டுகால அரசியலை சாபம் என்று விமர்சித்தது. பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளதுடன், பல பொய்களையும் குறிப்பிட்டுள்ளது என்பதையும் வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும். வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படும்.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தில் முறையான கோட்பாடு மற்றும் இலக்கு குறிப்பிடப்படவில்லை. சிறந்த திட்டங்கள் ஏதும் இல்லாவிடின் கடந்த காலங்களை போன்றே இந்த கொள்கை பிரகடனமும் பாரம்பரியமானதாகவே கருதப்படும்.



இனவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இனவாதத்துக்கு எதிராகவே நாங்கள் செயல்படுகிறோம். தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயல்படுபவர்களை இனவாதிகள் என்று சித்திரிக்கக் கூடாது. தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயல்பட்டதால் தான் அமெரிக்கர்கள் டொனால்ட் ட்ரம்பை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர்.

தேசியத்தை இனவாதம் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. தேசியத்தை சிறந்த முறையில் அடையாளப்படுத்திக் கொண்டு செயல்படாவிடின் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சலால் 10,000 பேர் பாதிப்பு

## நாள்தோறும் அதிகரிக்கும்நோயாளிகள் எண்ணிக்கை

கொழும்பு, டிசெ. 08

**நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 10 ஆயிரம் பேர் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், அதிகளவில் வெள்ளம் சூழ்ந்துள்ள இரத்தினபுரி, காலி, களுத்துறை, குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எலிக்காய்ச்சல் நோயால் வருடத்துக்கு 120 முதல் 200 பேர் உயிரிழக்கின்றனர்.

கண் சிவத்தல், காய்ச்சல், எரிச்சல், காயங்களில் வீக்கம் ஏற்படல் மற்றும் கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல் என்பன எலிக் காய்ச்சல் நோய் அறிகுறிகளாகும்.

எனவே, இந்த நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக மருத்துவரை நாடுவது அவசியம் என்றும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

(எ)

# அரிய வகை உயிரினம் விபத்தில் உயிரிழப்பு!

கல்முனை, டிசெ. 08

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிட்டங்கி ஆற்றின் அருகே மீன்பிடிப் பூனை இனத்தைச' சேர்ந்ததென நம்பப்படும் அரிய வகை உயிரினம் ஒன்று விபத்தில் சிக்கி உயிரிழந்தது.



இந்த உயிரினம் மீன்பிடிப் பூனை (அரிய வகை புலி) என அழைக்கப்படுவதுடன் மக்கள் வாழும் பகுதிகளில் நுழைந்து மீன் உட்பட மக்களின் வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடி வந்த நிலையில் இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்தது.

இந்த மீன்பிடி பூனை இலங்கையில் கொடுப்புலி என அழைக்கப்படுவதுடன் ஒரு நடுத்தர காட்டுப்பூனையாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த வகை உயிரினங்கள் தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இம் மாவட்ட பொதுமக்கள் சிலர் குறித்த அரிய வகை புலி போன்ற பூனை இனங்களை பிடித்துள்ளதுடன் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

(எ)

# தரமற்ற மருந்துகள் வழங்கப்படவில்லை

## சுகாதார அமைச்சர் விளக்கம்

கொழும்பு, டிசெ. 08

தரமற்ற மருந்துகள் அரசாங்க மருத்துவமனைக் கட்டமைப்பால் வழங்கப்படவில்லை என்று சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தரமற்ற மருந்துகள் தொடர்பில் வெளியான செய்திகள் குறித்து எதிர்க்கட்சியின் பிரதான இணைப்பாளர் கயந்த கருணாதிலக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட மருந்துகள் தான் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஊடாக விநியோகிக்கப்படுகின்றன.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் வினைத்திறனற்ற நிலை காணப்படுகின்றது. தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுகள் தற்போது விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால், நீங்கள் கூறும் விதமாக தரமற்ற மருந்துகள் அரசாங்க மருத்துவமனைக் கட்டமைப்பின் ஊடாக விநியோகிக்கப்படவில்லை. மருந்துத் தரத்தின் தன்மை தொடர்பில் பிரச்னை இருப்பின் அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

இது தொடர்பாக எதிர்காலத்தில் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும்”- என்றார்.

(எ)

# ஹெரோயின், கஞ்சாவுடன் 17 வயது சிறுவன் கைது

மட்டக்களப்பு, டிசெ. 08

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காந்திநகர் பிரதேசத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட விசேட அதிரடிப் படையினர், பெருமளவிலான ஹெரோயின் மற்றும் கேரளக் கஞ்சாவுடன் 17 வயதுச் சிறுவன் ஒருவரை கைது செய்து ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து குறித்த முகாம் பொறுப்பதிகாரியின் தலைமையில் குறித்த வீட்டை முற்றுகையிட்டு சோதனை மேற்கொண்டபோது விசேட அதிரடிப் படையினரை கண்டு தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த போதைப் பொருட்களை சிறுவன் வீசியுள்ளான்.

இதில் 10 கிராம் 950 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பொதி செய்யப்பட்ட 650 மில்லிக்கிராம் கொண்ட 5 பக்கெற் கேரளக் கஞ்சாவும், 7 கிராம் 200 மில்லிக்கிராம் கேரளக் கஞ்சாவை மீட்டதுடன் 17 வயதுச் சிறுவனை கைது செய்து சான்றுப் பொருட்களுடன் ஒப்படைத்துள்ளதாகவும் இவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

(எ)

# வயோதிபப்பெண் சுட்டுப்படுகொலை பேர்த்திக்கு வைத்த குறியில் சிக்கி பலி

கொழும்பு, டிசெ. 08

பதவிய, போகஹவெவ பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் நேற்று முன்தினம் இரவு வீடொன்றில் வைத்து 73 வயதுடைய பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரையும் புல்மோட்டை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் டுபாய் இராஜ்ஜியத்தில் மறைந்திருந்து நாட்டில் போதைப் பொருள் வலையமைப்பு மற்றும் குற்றச்செயல்களை வழிநடத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான வெலிஓயா பிரியந்தவின் இரண்டு உதவியாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் இருவரும் கிரிஹிப்பன்வெவ, வெலிஓயா பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலை உட்பட 3 கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் அதன் மகசின், 08 தோட்டாக்கள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் அதன் 04 தோட்டாக்கள், 61 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 105 கிராம் ஹெரோயின் என்பன விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

டுபாயில் தலைமறைவாக உள்ள வெலிஓயா பிரியந்தவின் மனைவியுடன் தகாத தொடர்பு வைத்திருந்த ஒருவரைக் கொல்வதற்காகவே மேற்படி கொலைகளில் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் போகஹவெவ பிரதேசத்தில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த கொலையான பெண்ணின் பேர்த்தியை சுடுவதற்காக வந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(எ)

# வானியற்பியல் பற்றி 3 நூல்கள் வெளியிட்ட மாணவனுக்கு உலக சாதனை அங்கீகாரம்

மட்டக்களப்பு, டிசெ. 08

வானியற்பியல் குறித்து 3 நூல்களை வெளியிட்ட காத்தான்குடியைச் சேர்ந்த 15 வயது மாணவனுக்கு சோழன் உலக சாதனைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த முஹம்மது அமாசீர் முகமது அமானத் என்ற 15 வயது மாணவன் வானியற்பியலின் மிகக் கடினமான தலைப்புகளான பிளெக் ஹோல், டார்க் மேற்றர் மற்றும் ஜெனரல் ரிலேடிவிடி பற்றி பல ஆய்வுகளை மேற்கொண்டு அவை பற்றி 3 நூல்களை வெளியிட்டுள்ளார்.

இப்புத்தகங்களை துறை சார்ந்த நிபுணத்துவம் மிக்க நடுவர்கள் மூலம் ஆராய்ந்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனமானது, மாணவனின் முயற்சிக்கு உலக சாதனைக்கான அங்கீகாரம் வழங்க முன்வந்தது.



இதனடிப்படையில் அலுவலக ரீதியிலான நிகழ்வு காத்தான்குடி அல்ஹிரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது வானியற்பியல் துறையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வரும் பொறியியல் நிபுணரான டெரி ரொஜர்ஸ் லியோன், மாணவன் அமாசீர் முகமது அமானத்திடம் அவருடைய ஆய்வு பற்றி பல கேள்விகள் தொடுத்து மாணவனின் திறனை உறுதி செய்தார்.

சோழன் உலக சாதனை படைத்த மாணவனுக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், தங்கப்பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை என்பன சோழன் உலக சாதனை நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

(எ)

பாராளுமன்றத்துக்கான

# ஐ.தே.க. தலைவராக ஜீவன் எம்.பி தெரிவு!

கொழும்பு, டிசெ. 08

பாராளுமன்றத்துக்கான ஐ. தே. க. தலைவராக ஜீவன் தொண்டமான் எம். பி. தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு ஓர் ஆசனத்தை பெற்றுக்கொண்டது.

இதில் 46, 438 விருப்பு வாக்குகளை பெற்ற, இ. தொ. கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார்.

அந்தவகையில் ஐ. தே. கவின் பாராளுமன்றத்துக்கான தலைவராக ஜீவன் தொண்டமான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.12.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், கார்த்திகை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## விரும்பும் அரசியல் தீர்வின் சாத்தியம்

ஒரு தேசிய இனம் என்னும் வகையில் ஈழத் தமிழர்கள் ஓர் அரசியல் தீர்வை விரும்பலாம் - தாங்கள் விரும்பும் தீர்வை கோரலாம். ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது தொடக்கம் ஒஸ்லோ பேச்சு வார்த்தை வரையில் தமிழ் மக்கள் சார்பில் பல கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட கோரிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட சொற்களில் வேறுபாடுகள் இருந்தாலும் கூட கோரிக்கையின் சாராம்சம் ஒன்றுதான். வடக்கு, கிழக்கை பூர்வீக வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாவர். அந்த வகையில், தங்களை தாங்களே தீர்மானித்து வாழும் அரசியல் ஏற்பாட்டை கோருவதற்கான உரித்து அவர்களுக்குண்டு.

1949இல், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கியதிலிருந்துதான், தமிழர் அரசியலில் சமஷ்டிக் கோரிக்கை முகம்காட்டியது. ஏனெனில், அதற்கு முதலில் சமஷ்டி பற்றிப் பேசியது தமிழ் தலைவர்கள் இல்லை. பிற்காலத்தில் ஈழத் தமிழர் களுக்கான சமஷ்டிக் கோரிக்கையை கடுமையாக எதிர்த்தவரான எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கதான், முதல் முதலாக இலங்கைத் தீவிற்கு சமஷ்டியை பரிந்துரைத்தவராவார். அதனைத் தொடர்ந்து, கண்டிய சிங்களத் தலைவர்கள் சமஷ்டியை வலியுறுத்தினர். ஆனால், இவ்வாறு சிங்களத் தலைவர்கள் சமஷ்டியை வலியுறுத்திய போது அதனை வடக்கு தமிழ் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், தமிழ் தலைவர்கள் சமஷ்டியை கோரிய போது சிங்களத் தலைவர்கள் ஆதரிக்கவில்லை.

1948இற்கு பின்னரான அரசியல் சூழலில் ஈழத் தமிழர்களின் சமஷ டிக் கோரிக்கையை இனவாதமாகவும், பிரிவினையாகவுமே தென்னி லங்கைத் தலைவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தினர். இந்த அடிப்படையில் வளர்ந்த ஒரு தலைமுறைதான் இன்றைய தென் னிலங்கை அரசியலை தீர்மானிக்கின்றது. சிங்கள அரசியல் சமூகம் எதிர்த்துவரும் ஓர் அரசியல் ஏற்பாட்டை மறுபுறமாக ஈழத் தமிழ் அரசியல் தரப்புக்கள் கோரிவருகின்றன. விடுதலைப் புலிகளின் அரசியல் கால கட்டம் முற்றிலும் வேறானது. பிரபாகரன் சமஷ்டியை அடைவதற்காகப் போராடவில்லை.

2009இற்கு பின்னரான அரசியல் சூழல் முற்றிலும் சிக்கலானதாக மாறியது. விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக்கான போராட்டம் தோற கடிக்கப்பட்ட பின்னணியில், மீளவும் முன்னைய சமஷ்டிக் கோரிக்கை முகம்காட்டியது. தமிழ் தேசியத்தை முன்னிலைப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் சமஷ்டியை உச்சரித்தன.

தற்போதுள்ள நிலையில் சமஷ்டியை தமிழ் கட்சிகள் எவ்வாறு அடை யப் போகின்றன? கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் மக்கள் பேர வையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டு மென்று கூறுகின்றார் - மறுபுறம் சிவஞானம் சிறீதரனோ தமிழ் மக் களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கின்றார். இவ்வாறான கோரிக்கைகளால் அரசியலில் வெற்றியைப் பெற முடியுமா?

தற்போதுள்ள அரசியல் சூழலில், தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை ஒரு போதுமே அடைய முடியாது - ஒரு வேளை அது சாத்தியப்பட வேண்டு மென்றால் சிங்கள அதிகார சமூகத்தை நிர்பந்திக்கும் ஆற்றல் தமிழர் தரப்புக்களிடம் இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறான நிர்பந்திக்கும் ஆற்றலை தமிழர்கள் எவ்வாறு பெறுவது? தங்களை புறம்தள்ளி இலங் கைத் தீவின் ஆட்சியை சுமுகமாகக் கொண்டு செல்ல முடியாது என்பதை ஈழத் தமிழர்கள் நிரூபிக்க வேண்டும் - இல்லாவிட்டால், ஒரு மூன்றாம் தரப்பின் நலன்களுக்கு ஈழத் தமிழ் மக்கள் தேவைப்பட வேண்டும். அதாவது, இலங்கைத் தீவை கட்டுப்படுத்துவதற்கு, ஈழத் தமிழர்களை குறித்த தரப்பு கையாள வேண்டும். இல்லாவிட்டால் ஈழத் தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வு என்பது எப்போதுமே வெறும் வார்த்தைகள் மட்டும்தான்.

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவது நல்லிணக்கத்துக்கு அவசியமானது!

### சட்டத்தரணிகள் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 08

தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையையும் பயங்கரவாத தடைச்சட்டத் தையும் நீக்கவேண்டும் என சட்டத்தரணிகள் ஒன்றி ணைவு வேண்டுகோள் விடுத் துள்ளது.

பயங்கரவாத தடைச்சட் டத்தை நீக்குவது மனித உரி மைகளுக்கு மாத்திரமின்றி நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் ஆகியவற்றுக்கும் அவ சியமானது எனவும் அது தெரிவித்துள்ளது.

நிறைவேற்றதிகார ஜனா திபதிமுறை காரணமாக சாத் தியமாகியுள்ள ஏதேச்சதிகார ஆட்சியானது ஜனநாயகம் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை உள்ளிட்ட நிறு வனங்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள் ளது என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள் ளது.

பயங்கரவாத தடைச் சட்டமானது இலங்கையில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பை கேலிக்கூத் தாக்கியுள் ளது, மேலும் சட்டபூர்வமான கருத்து சுதந்திரத்தை நசுக்குவதற்கு தொடர்ச்சியான ஆட்சியா ளர்கள் தனிநபர்கள் குழுக் கள் நிறுவனங்களுக்கு எதி ராக இதனை பயன்படுத்தி யுள்ளனர் என சட்டத்தரணி கள் அமைப்பு தெரிவித்துள் ளது.

(அ)

## சிறுவரை விளம்பரங்களில் பயன்படுத்துவதற்கு தடை!

கொழும்பு, டிசெ. 08

12 வயதுக்குட்பட்ட சிறு வர்களை ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் விளம் பரங்களில் பயன்படுத்து வதை தடைசெய்ய நட வடிக்கை எடுக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் வைத் தியர் ஹசங்க விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்து வதற்கான அனைத்து ஏற் பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பாராளுமன் றத்தில் உரையாற்றிய பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரி வித்த அவர்,

குறிப்பாக 12 வயதுக்குட் பட்ட சிறுவர்களை ஜனவரி முதலாம் திகதி முதல் விளம் பரங்களுக்கு பயன்படுத்து வதை தடுப்போம். அதற் கான வர்த்தமானியை அமுல் படுத்துவதற்கான அனைத்து பணிகளையும் மேற்கொண் டுள்ளோம். ஏனெனில் கடந்த அரசாங்கங்கள் இதனை 7-8 வருடங்களாக இழுத்தடிப்பு செய்தன. கடந்த வாரம் நாங் கள் ஒரு தீர்மானத்தை எடுத் தோம், அதை நாங்கள் இழுத் தடிக்க போவதில்லை. ஜன வரி முதலாம் திகதி முதல் இதை அமுல்படுத்துவோம்- எனக் கூறினார். (அ)

## சமூக ஊடகங்கள் மூலம் நிதி மோசடி; 22 வயது இளைஞர் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, டிசெ. 08

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி நபரொருவரிட மிருந்து நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட தாக பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் நப ரொருவரிடமிருந்து 500,000 ரூபாவுக்கும் மேல் பணம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய வடமேல் மாகாண பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன் னெடுத்திருந்தது.

சமூக ஊடகங்கள் மூலம் பணம் சம்பாதிக்க முடியும் எனக் கூறி மோசடி இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கண்டி, திகன பிரதேசத் தைச் சேர்ந்த இளைஞர் ஒரு வரே நிதி மோசடி குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

(அ)

## விபத்தினை ஏற்படுத்திவிட்டு காரில் தப்பிய நால்வர் கைது!

கொழும்பு, டிசெ. 08

இரத்மலானை பிரதேசத் தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதி விபத்தை ஏற் படுத்திவிட்டு காரில் தப்பிச் சென்ற நான்கு சந்தேக நபர் கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பொலிஸ் விசேட அதிர டிப்படையின் அதிகாரிகள் சிலர் விபத்தை ஏற்படுத்திச் தப்பிச் சென்ற காரை மோட் டார் சைக்கிளில் துரத்திச் சென்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடுகமுவ பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய காரின் சாரதியும் உடுகம் பொல மற்றும் கித்துல்கல பிரதேசங்களில் வசிக்கும் 19, 20 மற்றும் 26 வயதுடைய மூவருமே கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட காரின் சாரதியிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணை யில், விபத்தின்போது அவர் மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூ டியூப் அமர்க்களங்கள்!

பவித்ரா நந்தகுமார்

கொரோனா பரவலுக்குப் பிறகு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும்போக்கு மக்களிடம் பன்மடங்கு பெருகிப் போனது நாம் அறிந்ததே. ஜூம், கூகுள் மீட் போன்ற இணைய சந்திப்புகள் பற்றிய அறிவு சாமானியருக்கும் தெரிய வந்தது, அதன் பிறகு தான். யூ டியூப் சேவை கூட அப்படித்தான். 2005 -இலேயே தொடங்கப்பட்டிருந்தாலும் வேக வேகமாக ஓடிக் கொண்டிருந்த மக்கள், ஊரடங்கு நேரத்தில் கிடைத்த நீண்ட ஓய்வுகளில்தான் யூ டியூப் காணொளிகளை அதிகமாகப் பார்க்கத் தொடங்கினர். கிடைத்த ஓய்வு நேரத்தில் பலரும் யூ டியூப் பக்கங்களை உருவாக்கி தங்கள் நேரத்தைப் பயனுள்ளதாக மாற்றிக் கொண்டனர். 2019 - க்குப் பிறகே யூ டியூப் பன்மடங்கு வளர்ச்சி அடைந்தது எனச் சொல்லலாம். 2024, மார்ச் மாத நிலவரப்படி யூ டியூபானது 200 கோடியே 49 லட்சத்துக்கும் அதிகமான பயனாளர்களைக் கொண்டுள்ளது.

சந்தா தேவைப்படும் பெரும்பாலான காணொளித் தளங்களைப் போல் அல்லாமல், யூ டியூப் ஒரு கவர்ச்சிகரமான தளமாகும். சந்தாதாரர்கள் மற்றும் பார்வைகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு யூ டியூபின் தரமும் செயல் திறனும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

யூ டியூப் தொடக்கத்தில் புதுப்புது செய்திகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் கற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பை உருவாக்கி கொடுத்தது என்பதை மறுக்க முடியாது. நம் தேவைக்கு ஏற்ற வேளையில் குறிப்பிட்ட நேர எல்லையில் நாம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வசதி இருப்பதுதான் யூ டியூபின் சிறப்பு. நம் தினசரி வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கும் துறை வல்லுநர்களிடம் தகவல்களைப் பெற்று அதை பல்வேறு கோணங்களில் அலசி, அதற்கான விடைகளைச் சுடச்சுட பரிமாறி இருப்பார்கள். பல்வேறு சூழல்களுக்கு ஏற்ப வெவ்வேறு படிநிலைகளில் காலப்போக்கில் தேடப்படும் அத்தனை கேள்விகளுக்கும் உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் இருக்கும் ஏதோ ஒரு யூ டியூபில் பதிலளித்துக் கொண்டே இருக்கிறார்கள். காய்கறி நடவாகட்டும், சமையல் செய்முறையாகட்டும் பொருட்களின் பயன்பாட்டு விளக்கங்களாகட்டும், புதுப்புது தொழில்நுட்ப செய்திகளாகட்டும், நாட்டு நடப்பு சங்கதிகளாக இருக்கட்டும் எதைப்பற்றியும் தெரிந்து கொள்ள யூ டியூப் பக்கங்கள் உள்ளன.




அத்துடன் கல்வி, வணிகம், விளையாட்டு, திரைப் படம், இசை, ஊர் சுற்றுதல், பொழுதுபோக்கு, நகைச்சுவை,கேளிக்கை, மொழி அறிவு, ஆன்மிகம், ராசி பலன், மருத்துவக் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், அழகு சாதனங்களை உபயோகிக்கும் முறை, பிரபலங்களுடன் கலந்துரையாடல், தனது அன்றாட நிகழ்வுகளைப் படம் பிடிப்பது, பொது அறிவு, இலக்கியம், போட்டித் தேர்வுகள், வரி மேலாண்மை, சட்ட ஆலோசனை என எக்கச்சக்கமான யூ டியூப் காணொளிகள் இணையத்தில் கொட்டிக் கிடக்கின்றன. இதில் என்ன ஒரு சௌகரியம் என்றால், நாம் நேரம் ஒதுக்கி இணையத்தில் தேடுபொறிகள் மூலம் தேடிப் பிடித்து படித்துப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்களை நாம் இன்னொரு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே ஓர் எளிய காணொளி மூலம் அறிந்து கொள்கிறோம்.

ஆரம்பத்தில் தனக்கு பிடித்தமான காணொளிகளைக் காண சந்தாதாரர்களாக இணைந்த மக்கள், அதிகப்படியான பார்வையாளர்களைப் பெறுவதன் மூலம் பணம் ஈட்டவும் முடியும் என்பதைப் பரவலாக அறிந்து கொண்டு, படைப்பாற்றல் திறனை பக்கபலமாக்கி தினம் ஒரு காணொளியை பதிவிட்டு கலக்குகிறார்கள்.

இன்றைய தேதி நிலவரப்படி யூ டியூப் மூலம் உலக அளவில் அதிகம் சம்பாதிப்பது அமெரிக்காவைச் சேர்ந்த ரயான் என்னும் ஏழு வயதுச் சிறுவன் தான். ஃபோர்ப்ஸ் சஞ்சிகையின் கணக்கின்படி பொம்மை விமர்சகரான ரயான் யூ டியூப் மூலம் 22 மில்லியன் டாலர்களைச் சம்பாதித்து முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

யூ டியூப் வணிகம் என்றே ஒரு புது வணிக உலகம் புதிய திசையில் பயணிக்கிறது. வாடகைக்குக் கடை தேவை இல்லை, சரக்கு இருப்பு அவசியமில்லை, கையிருப்பை வைத்து ஒவ்வொன்றாக காணொளியில் காண்பித்தால் போதும். அதைப் பார்த்த பின்பு வரும் எண்ணிக்கைகளை வைத்து , அடுத்தடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்ல இயலும். இப்படி பல யூ டியூப் பக்கங்களை உருவாக்கி வாழ்வில் மிகப்பெரிய உயரத்துக்கு சென்ற பலர், நம் முன் உதாரணங்களாக இருக்கிறார்கள்.

மற்றொரு பக்கம், மக்களை மகிழ்விக்க தினம் புதுப் புது யுக்திகளைக் கையாண்டு ரசிப்புக்குரியதாக படம் எடுத்து அதைப் பதிவிட்டு பிரபலங்களாக வலம் வருகிறார்கள். திரைப்பட கதாநாயக, கதாநாயகிகளுக்கு இருக்கும் புகழ் இவர்களுக்கும் உருவாகி இருக்கிறது. காணொளிகளாகப் பதிவிட்டு மக்களுக்கு அவர்கள் முகம் பழகி புகழ் வெளிச்சமும் அவர்கள் மீது விழுவதால் யூ டியூப் ஆளுமைகள், இன்றைய தேதியில் அதிகரித்துள்ளார்கள்.

நவீன காலத்திற்கு இப்படி வரப்பிரசாதமாக வந்த இந்த யூ டியூப் அதற்கே உண்டான குறைகளையும் கொண்டுள்ளது. ஒருவரைத் தரக்குறைவாக விமர்சித்து அதன் மூலம் லட்சக்கணக்கான பார்வையாளர்களைக் கடந்து பெரும் புகழ் பெற வேண்டும் எனும் போக்கு சமீப காலமாக அதிகரித்துள்ளது. யூ டியூபில் தோன்றக் கூடிய நபரைப் பொறுத்து அவர் சொல்லும் செய்திகளின் நம்பகத்தன்மையை அளவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பதிவிடப்படும் கருத்துகள் பாதிக்கும் மேல் பொய்யும் புரட்டுமாக இருப்பதால்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 08.12.2024 - 14.12.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 23
நல்ல நேரம்: 09.17 - 10.47 ராகு காலம் : 04.44 - 06.17 திதி : சப்தமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். விரும்பிய ஆடை, ஆபரணங்கள், பிடித்தமான நல்ல உணவு, ஆகியவை கிடைக்கும். அறிஞர்கள் நிறைந்த மேடைகளில், கௌரவப் பட்டங்கள் உங்களை அலங்கரிக்கும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வெளியூர் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. உறவினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்காவிட்டால் விபத்தில் சிக்க நேரிடலாம். வீட்டில் சுப காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத காரியங்களுக்காக அலையும் நிலை ஏற்படும். சிலருக்குக் கையிருப்பு குறைந்து பண முடைகள் ஏற்படலாம். இடுக்கண் களைய உதவும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். செய்தொழிலில் எதிர்பார்த்தபடி நல்ல முன்னேற்றங்கள் இருக்கும். வாக்குவன்மையால் பொருளாதார நிலை உயரும். பூஜை வழிபாடுகள் தடைப்பட்டு வந்த காரியங்கள் அனைத்தும் விரைவாக நடைபெறும். வெளியூர், வெளிநாட்டு பயணங்களின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கட்டுக்கு அடங்காத செலவுகளால் மனஅமைதி குறையும். ஆயினும், புதுப்புது முயற்சிகளால் தனவரவு அதிகரித்து கேளிக்கை ஈடுபாடு, இனிய பயணங்கள் ஆகியவை ஏற்பட்டு சந்தோஷம் தரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சம்பந்தமான நற்செய்திகள் வரும். மக்களிடம் தங்கள் விற்பனைத் திறமைகளைக் காட்டி வியாபாரத்தில் லாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற இனிய சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். எதையும் துணிகரமாக எடுத்து மேற்கொள்ளும் தனித்திறன் உங்களிடம் இருப்பதால் வாழ்க்கையில் உச்சத்துக்குச் செல்வீர்கள். பிள்ளைப்பேறு, தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல ஆன்மிகக் கருத்துக்கள் கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். சுபகாரியச் செலவுகள் ஏற்பட்டு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நண்பர்களுடன் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி பொங்க பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் தாமதமின்றி சாதகமாக நிறைவேறும். மாணவர்கள் அன்றன்றைக்கு தங்கள் பாடங்களை அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நல்லதும், கெட்டதுமாகக் கலந்த பலன்கள் ஏற்படும் ஆதலால் பக்தி மார்க்க ஈடுபாடு நல்ல பலன் தரும். சாதிக்கத் துடிக்கும் உங்கள் கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றி அனைவரின் பாராட்டினையும் பெற்றுத் தரும். தந்தைக்கு உங கள் உதவி தேவைப்படலாம். சம்பாதித்த பணத்தைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலமாக சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாகப் பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். வழக்குகளில் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். அக்கம் பக்கத்தில் தேவையற்ற விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. மனைவி, குழந்தைகளிடம் மனம்விட்டு சிரித்துப் பேசி மகிழுங்கள். பெண்கள் தங்களை அழகுபடுத்திக்கொண்டு, அழகை வெளிக்காட்டும் வகையில் பல விழா நிகழ்வுகள் கைகொடுக்கும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் இலாபம் பெருகும். பலன் அளிக்கக் கூடிய இனிய பயணங்கள் பலவற்றை மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கேற்ற, சக்தி மிக்க, அதிகாரமிக்க பதவிகள் உங்களைத் தேடிவரும். நெருங்கிய உறவுகளை அனுசரித்துச் சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். அவர்களால் பாராட்டவும் படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழுக்கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும், சுபச் செய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை தோற்கடிக்கும் உறுதிப்பாட்டை சொல்லில் மாத்திரமல்ல செயலிலும் காட்டவேண்டும்




வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நாளடைவில் வரக் கூடிய சவால்கள் பிரதானமாக இனவாத அரசியல் சக்திகளிடமிருந்தே வரக்கூடும் என்று அதன் தலைவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை நவம்பர் 21 சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இனவாத அரசியலும் மதத் தீவிரவாதமும் மீண்டும் தலையெடுக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று சூளுரைத்தார்.

தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்காக நாடு நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த மிகவும் உறுதியான சந்தர்ப்பம் தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை பாராளுமன்ற தேர்தல் வெளிக்காட்டியிருக்கிறது என்றும் எங்களுக்கு இடையில் வேறுபட்ட அரசியல் கோட்பாடுகள் இருந்தாலும், 



இனவாத அரசியலுக்கு மீண்டும் இடம் கொடுக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

அதை தொடர்ந்து கடந்தவாரம் ஜனாதிபதியின் உரை மீதான பாராளுமன்ற விவாதத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய இன, மத வேறுபாடுகளைக் கடந்து முன்னேறுவதற்கு மக்களுக்கு முன்னாலுள்ள பொன்னான சந்தர்ப்பத்தை பாழ்படுத்தக்கூடியதாக தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அரசியல் அனுகூலத்துக்காக இனவாதத்தையும் பிளவுகளையும் தூண்டுவதற்கு மேற்கொள்ளக்கூடிய எந்த முயற்சியையும் ஒடுக்குவதற்கு அரசாங்கம் ஒருபோதும் தயங்கப்போவதில்லை என்று எச்சரிக்கை செய்தார்.

அதே போன்று அமைச்சரவை பேச்சாளர் நாளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உட்பட பல அமைச்சர்களும் தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளும் இனவாத அரசியலுக்கு இனிமேல் நாட்டில் இடமில்லை என்று கூறினர். அவர்களைப் பொறுத்தவரை, “இன, மத வேறுபாடுகளின்றி மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக இனவாதமும் மதத்தீவிரவாதமும் பயன்டுத்தப்படுவதை தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பு.”

இலங்கைக்கு சாபக்கேடாக இருந்து வரும் இனவாதத்துக்கும் மதத் தீவிரவாதத்துக்கும் எதிரான ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் இந்த உறுதியான நிலைப்பாடு மிகவும் மகிழ்ச்சி தருகிறது. வடக்கு, கிழக்கில் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினத்தில் இடம் பெற்ற நிகழ்வுகளை பயன்படுத்தி இனவாதத்தை தூண்டும் நோக்குடன் சமூக ஊடகங்களில் பதிவுகளைச் செய்தவர்களுக்கு எதிராக உடனடியாகவே சட்ட நடவடிக்கை எடுத்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

முன்னைய தேர்தல்களைப் போலன்றி இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் இனவாத அரசியல் முனைப்புப் பெறவில்லை. அதே சூழ்நிலையை தொடர்ந்தும் உறுதி செய்வதில் அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராவும் தங்களுக்கு மக்கள் அளித்த மாபெரும் ஆதரவை தேசிய ஐக்கியத்துக்காக தரப்பட்ட ஓர் ஆணையாக தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் நோக்குகிறார்கள்.

இனவாதம் தோற்றுவித்த பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமானதும் உருப்படியானதுமான தீர்வுகளைக் காண்பதில் அரசாங்க தலைவர்கள் எந்தளவுக்கு அக்கறை காட்டுவார்கள் என்பதிலும் அந்த நோக்கத்துக்காக அவர்களால் பெரும்பான்மையின சிங்கள மக்களின் நம்பிக்கையை எந்தளவுக்கு வென்றெடுக்கக் கூடியதாக இருக்கும் என்பதிலேயே இனவாதத்துக்கு எதிராக அரசாங்கம் “பிரகடனம் செய்திருக்கும் போரின்” வெற்றி தங்கியிருக்கிறது.

அதேவேளை, தாங்கள் மீண்டும் தலையெடுப்பதற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களுக்காக இனவாத சக்திகள் காத்துக் கொண்டிருக்கின்றன. தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த மகத்தான தேர்தல் வெற்றியையும் குறிப்பிட்ட சில கடும்போக்கு தேசியவாத அரசியல்வாதிகளுக்கு கிடைத்த தோல்வியையும் இனவாதத்தின் தோல்வியாக கருதவும் முடியாது. இலங்கையின் இனவாத அரசியலின் தன்மையையும் அதன் வரலாற்றையும் நன்கு விளங்கிக் கொண்டவர்களுக்கு இது விடயத்தில் எந்த குழப்பமும் இருக்காது.

மாவீரர் தினத்தில் நினைவேந்தல்களைச் செய்வதற்கு அரசாங்கம் தமிழ் மக்களை அனுமதித்தை கூட சகித்துக் கொள்ள முடியாமல் தென்னிலங்கை சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகள் கண்டனம் செய்தார்கள். அதற்கு முதல் யாழ்ப்பாணத்தில் சில இராணுவ முகாம்களை அகற்றி அந்த நிலங்களை அவற்றின் உரிமையாளர்களான குடி மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது தேசிய பாதுகாப்பில் தாங்கள் மாத்திரமே அக்கறை கொண்டவர்கள் என்ற நினைப்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச போன்றவர்கள் எச்சரிக்கை செய்தார்கள்.

ஆனால், முன்னைய ஆட்சியாளர்களைப் போலன்றி தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் குறிப்பாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால போன்றவர்கள் போரில் இறந்த தங்களது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறி அரசாங்கத்தின் நடவடிக்கையை நியாயப் படுத்தினார்கள்.

இவ்வாறாக அரசாங்க தலைவர்கள்

மத்தியில் ஏற்பட்டிருக்கும் மனநிலை மாற்றம் படிப்படியாக தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகள் தொடர்பான அணுகுமுறைக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு கிடைத்திருக்கும் பொன்னான சந்தர்ப்பம் என்று அரசாங்க தலைவர்கள் வர்ணிக்கின்ற தற்போதைய சூழ்நிலையை சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு குறிப்பாக அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிராக தென்னிலங்கையில் நிலவும் ஆழமான எதிர்ப்புணர்வுகளை படிப்படியாக அகற்றுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து மாகாண சபைகளை அமைப்பதற்காக கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் 37 வருடகாலமாக நாட்டின் அரசியலமைப்பில் இருந்துவருகின்ற போதிலும், அதை நடைமுறைப்படுத்துவதில் மாத்திரமல்ல, சிங்கள மக்கள் மத்தியில் பேசுவதற்கே தென்னிலங்கையின் பிரதான அரசியல் சக்திகளிடம் ஒரு மனத்தடை இருக்கிறது.

**சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கும் அதிகாரப்பரவலாக்கலுக்கும் எதிராக தென்னிலங்கையில் இருக்கின்ற வெறுப்புணர்வை அகற்றுவதற்கு தனக்கும் அரசாங்கத்துக்கும் இருக்கும் பேராதரவை ஜனாதிபதி பயன்படுத்த வேண்டும்**

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தொடக்கத்தில் இருந்தே 13 வது திருத்தத்தை எதிர்த்து வந்த போதிலும் காலப்போக்கில் மாகாணசபைகளில் அங்கம் வகித்தது. மாகாணசபைகள் முறைமை இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்டது என்பது தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் நிலைப்பாடாக இருக்கின்ற போதிலும், அதை அரைகுறையாகவேனும் நடைமுறைப்படுத்துவதை அரசாங்கங்களினால் தவிர்க்க முடியவில்லை.

இந்தியாவுடனான உடன்படிக்கை ஒன்றின் விளைவாக மாகாணசபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்காவிட்டால் இலங்கையில் என்றைக்காவது ஏதாவது ஓர் உருப்படியான அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாட்டை எம்மால் காணக்கூடியதாக இருந்திருக்குமா? தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் கடந்த காலத்தில் அரசாங்கங்களுடன் தமிழ்த் தலைவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகள் எல்லாமே தென்னிலங்கை இனவாத சக்திகளின் எதிர்ப்பின் காரணமாகவே கிழித்தெறியப்பட்டன. இந்தியாவின் தலையீட்டின் விளைவாக கொண்டுவரப்பட்ட ஒரே காரணத்தினால் மாத்திரமே மாகாணசபைகள் முறை இன்று வரை விட்டு வைக்கப்பட்டிருக்கிறது என்பது தானே உண்மை.

தங்களது பிரச்சினைகளுக்கு மாகாண சபைகள் முறையை ஒரு தீர்வாக தமிழ் மக்கள் விரும்புவார்களாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்வதில் தஙகளுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்று ஜனாதிபதியாக வருவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் கூறியதை அநுர குமார திசாநாயக்க மறந்திருக்கமாட்டார். உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னர் தமிழ் மக்களை நடைமுறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான பாதையில் வழிநடத்தத் தவறிய தமிழ் அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் 13 வது திருத்தம் மற்றும் மாகாணசபை முறைமை தொடர்பில் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை அரசாங்கம் இனி மேலும் கருத்தில் எடுக்கத் தேவையில்லை.

இந்த தமிழ்க்கட்சிகள் இதுகாலவரையான தங்களது அரசியல் அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழ் மக்களிடமிருந்து மேலும் தனிமைப்படும் ஆபத்தே அவர்களைக் காத்திருக்கிறது.

நீண்டகால அடிப்படையில் நிலையான அரசியல் தீர்வொன்றை நோக்கிய பயணத்தில் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கொழும்பில் அரசாங்க தலைவர்களுடனும் இந்திய இராஜதந்திரிகளுடனும் பேசும்போது கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அந்த விடயத்தில் அதற்கு அப்பால் எதுவும் செய்வதில்லை.

தமிழ் மக்களிடம் ஒரு கற்பனாவாத தமிழ்த் தேசியவாதம் பற்றியே அவர்கள் பேசுவார்கள். இந்த தடவை பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் மூலமாக அவர்கள் எந்த படிப்பினையையாவது பெற்றிருக்கிறார்களா என்பது சந்தேகமே.

மாகாணசபைகளின் எதிர்காலம் குறித்து ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் ஊடக நேர்காணல்களில் தெரிவித்த கருத்துக்களை அடுத்து தோன்றிய சர்ச்சைக்கு பிறகு அது தொடர்பில் விளக்கம் அளித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை மாகாணசபைகள் தற்போதுள்ளதைப் போன்று அப்படியே இருக்கும் என்று கூறினார்கள்.


ஆனால், கடந்த ஆறு வருடங்களாக மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படாமல் அவை ஜனாதிபதியின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரன் எனும் மாபெரும் விம்பம் வீழ்ந்தது எப்படி?

மதுசூதன்



சுமந்திரன் என்னும் மந்திரம் தமிழர் தேசிய பரப்பில் ஒரு தவிர்க்க முடியா ஆளுமைதான். அரசியலமைப் பின் அத்தனை பிரிவுகள் உட்பிரிவுகள் வியாக்கியானங்கள் எல்லாவற்றையும் விரல் நுனியில் அல்ல நாக்கின் நுனியி லேயே வைத்திருப்பவர். அவர் தமிழர் தேசிய அரசியலில் வேண்டப்பட்டவ ராக காலத்தால் உணர்ந்து 2010 கூட்ட மைப்பின் தலைவர் சம்மந்தனால் தேசி யப்பட்டியல் ஊடாக பாராளுமன் றத்துக்குள் அழைத்து வரப்பட்டவர். அவரை பலர் பின்கதவால் வந்தவர் என வசைபாடினாலும் தேசியப்பட்டியல் என்பதே நேரடி அரசியலில் ஈடுபட விரும்பாத பல திறமையான, ஆளுமை யானவர்களை பாராளுமன்றம் அழைத்து வருவதற்கான ஏற்பாடே! அதை தமிழ் தேசிய கூட்டமைப்பு அன்று செய்தது.

2009 போர் மெளிக்கப்பட்ட பின் ஏற் பட்ட பெரும் அரசியல் இடைவெளியில் நின்று நிதானித்து களமாட வேண்டிய தேவை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இருந்தது. ஆயுதங்கள் இல்லாத தருவா யில் எம் அறிவாயுதங்கள் கொண்டு போர் தொடுத்து எமக்கு தேவையான வற்றை பெற்றுகொள்ளும் அகிம்சாவழி வெளியே அன்று காணப்பட்டது. அது வும் போர் வெற்றி மிதப்பில் இருந்த கடும் சிங்கள பௌத்த பேரினவாத அர சோடு அறிவால் போர் புரிய வேண்டிய நிர்பந்தம் தமிழர் தரப்புக்கு கனதியாக இருந்தது. அதற்காக சுமந்திரன் சம்மந்த ரின் கைகளினால் கூட்டமைப்பின் அங் கத்துவ கட்சிகளின் ஆதரவோடு அழைத்து வரப்பட்டார். 2015 தேர்தல் களில் கூட தமிழரசின் தலைவர் மாவை கூட தன் விருப்பிலக்கத்துடன் சுமந்திரன் கட்டாயம் இனத்துக்கு தேவை அவரின் விருப்பிலக்கம் 3இற்கும் போடுமாறு தானும் தன் ஆதரவாளர்கள் மற்றும் மக்களையும் கேட்டுகொண்டார். நாமெல்லாம் பிரசாரம் செய்யும் போது வீடு 3ஆம் நம்பர் கட்டாயம் என்று சுமந் திரனுக்காக அழுத்தமாக ஆரோக்கிய மாக பிரசாரத்தில் அன்று ஈடுபட்டிருந் தோம். அவரும் வெற்றி ஈட்டினார். ஆக 2010 தேசிய பட்டியல் ஊடாக வந்து 2015 வரை ஒரு தடவை பாராளுமன்ற காலத்தை பூர்த்தி செய்தவர் 2015 மீண்டு ம் தெரிவானார். 2015 நல்லாட்சி காலத் தில் புதிய அரசியலமைப்பு சீர்திருத்த பணிகளில் மும்முரமாக ஈடுபட்டார். எம் தீர்வுகளை பெற சிங்கள தரப்புடன் விட்டு கொடுப்புக்களை சமரசங்களை செய்து முழு வீச்சுடன் அரசியலமைப்பு பணிகளை மேற்கொண்டார். அவர் அரசியலமைப்பூடாக தீர்வை பெற்று விடுவாரோ என சிங்கள தரப்புக்கு பயம் இருந்ததோ இல்லையோ இங்கே தமிழ் தேசிய பரப்பில் தேசியம் பேசும் கட்சிக்கு பெரும் பயம் இருந்தது. அவரை கடுமையாக அனுதினம் விமர் சனம் செய்வதில் அவர்களது ஆதரவா ளர்கள் முடுக்கி விடப்பட்டார்கள். ஆனாலும் அரங்கம் நிறந்த விளக்க கூட் டங்களை மக்கள் முன் அவர் நிகழ்த்தி அரசியலமைப்பை நெம்பி கொண்டே இருந்தார். மைத்திரி அரசு தோல்வியுற் றதும் அரசியலமைப்பு சீர்திருத்தம் கைநழுவி போனது. ஆனாலும் 2020 தேர்தலில் அவர் மீள போட்டி போட்ட போதும் பல விமர்சனங்களுக்கு அப் பால் அவருக்காக பல மேடையேறி பிர சாரம் செய்தோம். இறுதியில் கையறு நிலையில் விளிம்பில் வென்றார். அந்த வெற்றியைக்கூட அவருக்கு பிடிக்கா தோர் திரிபடைந்தே கதை பேசி திரிந்த னர்.

இவற்றின் மத்தியில் சுமந்திரன் எனும் மாபெரும் விம்பம் எங்கே மங்க தொடங்கியது? ஆரம்பத்தில் ஐநாவில் நடந்தது இனப்படுகொலை அல்ல போர்குற்றமே என பொது வெளியில் கருத்துரைத்ததன் மூலம் உலக தமிழ் மக்கள் இனப்படுகொலை என நிரூபிக்க முயலும் சந்தர்ப்பத்தில் அவர் அவ்வாறு கருத்துரைத்தமை தமிழர் மத்தியில் பெரும் கலகத்தையும் விமர்சனத்தையும் உண்டு பண்ணியது. தமிழர் சார்பான ஐ. நா. விடயங்களை தானே கையாண்டு அதை மற்றவர் பகிர்வு வெளிக்குள் தள்ளாமல் பார்த்து கொண்டார் அவரின் ஆளுமையினால் எல்லாவற்றினையும் எடுத்தெறிந்து கையாளலாம் என்ற போக்கு அவரை மெல்ல மெல்ல சரித் தது. அதிலும் தான் கையாளும் விடயங் களை கூட்டமைப்பு அங்கத்துவ பிரதான கட்சி தலைவர்களுடன் பகிர கூட அவர் தயார் இல்லை! இவை எல்லாம் அவர்க ளுக்கு எங்க விளங்கபோது என்று அவர்களை பொருட்டாக மதியாமல் ஒவ்வொரு கூட்டமைப்பு ஒருங்கி ணைப்பு குழு கூட்டத்திலும் தன்னிச்சை யாக செயல்பட்டதும் கூட்டாளி கட்சி களை புறமொதுக்கி செயல்பட்டதும், அவர்கள் வீட்டுக்குள் இருப்பதால் தான் வெல்கிறார்கள் இல்லாது போனால் அடையாளம் இல்லாது ஒழிவார்கள் என நினைத்து தன் சுய சுருதியிலேயே இயங்கினார். கூட்டமைப்பின் ஒற்று மையினை சீர்குலைக்க அதுவே காரண மாகியது. கூட்டமைப்பு எப்போது உடைய ஆரம்பித்ததோ அப்போதே அவரின் தோல்வியும் உறுதியாகியது. ஆனால் அதை உணராதவராகவே அவர் இயங்கினார். சரியான தலைவன் எனப் படுபவன் தன்னோடு ஒரணியில் நிற்பவர் களையும் அரவணைத்து கொண்டு வெற்றி படி நோக்கி நகருவதே ஆளுமை யாகும். ஆனால் அதில் அவர் கடுகளவே னும் கரிசனை கொள்ளவில்லை. இறுதிய ில் கூட்டமைப்பு சிதைந்து அனைவரும் வெளியேறினர்.

இறுதியில் தமிழ் அரசு தலைவர் போட்டியில் தான் பங்கேற்றாலும் இறுதி தீர்ப்பை ஏற்று கட்சியினை வழி நடத்தி தலைமைத்துவ பண்பை நிலை நாட்டியிருக்க வேண்டும். ஆனால் அதி லும் சொந்த கட்சிக்கு எதிராக வழக்கு போட்டு யாருக்கோ சூனியம் வைப்ப தாக கருதி தனக்கு தானே சூனியம் வைத்து கொண்டார். இவ்வளவும் அவராலா நடந்தது என்றால் இல்லை என்றே சொல்லலாம் அவரின்

> நாமெல்லாம் வியந்து அண்ணாந்து பார்த்த ஆளுமை இப்படி வீழ்ந்து கிடக்கையில் நெஞ்சணாத் துயராகதான் இருக்கிறது. ஆனால் அவர் செய்த கர்மவினை அவரையே காவு கொண்டது. அவர் பிறருக்காக செம்பு காவிகளுடன் சேர்ந்து இரவு பகலாக வெட்டிய பொறிக்கிடங்கில் அவரே இறுதியில் வீழ்ந்தார்.

செயற்கை ஆதரவு கூட்டத்தால் தான் சுமந்திரன் எனும் பெரும் விம்பம் சரிய தொடங்கியது. தமிழ்நாட்டு அரசியலை விட மிக மோசமான செம்பு தூக்கும் அரசியல் கலாசாரத்தை தமிழரசுக்குள் வாளர்த்து விட்டதால் வந்த வினை இது. தனிமனித துதிபாடும் அரசியலை அவர் ஆமோதித்தார் அங்கே தான் அவர் விட்ட பெரிய தவறு. உண்மையில் அவர் ஆளுமையானவர் என்பது அனை வருக்கும் தெரிந்திருக்க செயற்கையாக 'ராஜாதி ராஜ', 'ராஜ மாத்தாண்ட', 'ராஜ குலதிலக', 'ராஜ குலோத்துங்க' துதி பாடல்களால்தான் அவரின் ஆளுமை மங்க தொடங்கியது. அவரின் கடும் விசுவாசிகளாக முகப்புத்தகத்தில் துதிபாடுவோரில் பலர் முன்னர் தமிழ ரசில் சிறிதரனை ஆதரித்தவர்கள் அல் லது சிங்கள கட்சிகளின் பின்புலம் கொண்டவர்கள் சிலர் புலனாய்வுதுறை பின்புலம் கொண்டவர்கள் ஆனாலும் சுமந்திரன் பின் அவர்கள் திரண்டார்கள். திரண்டதன் நோக்கம் கொள்கை விசுவா சத்தால் அல்ல!!! பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும், பிரதேச சபை சீற்றுக்காகவும், தவிசாளர் மேயர் பதவிகளுக்காகவும் மாகாண சபை, பாராளுமன்ற வேட்பாளர் ஆகும் நோக் கத்திலும் வெறும் சலுகைகளுக்காக திரண்ட கூட்டம் அது. அந்த கூட்டம் எப்போதுமே அவரின் குறை நிறைகளை சுட்டி காட்ட போவதில்லை. சிலிப்பர் செல்களை போல சுமந்திரன் என்ன செய்தாலும் அதை துதி பாடும். அந்த அவர் உருவாக்கிய செயற்கை துதிபாடும் கூட்டம் தான் இன்று அவரின் தோல்விக் கான முதலும் இறுதியுமான காரணம். அவர் என்னை ஒருமுறை எனது வீட்டில் சந்திக்கும் போது நான் அவரிடம் சொன்ன வார்த்தைகள் இவை "சேர் உங்களின் ஆளுமை என்பது வேறு நீங்கள் இப்போது விளைந்த வயலுக்குள் போய் உழுது கொண்டு இருப்பது உங்கள் விம்பத்தை உடைக்க பண்ணும் வேலை" என்றேன். அதற்கு அவர் மௌனம் காக்க அருகில் இருந்த சயந் தன் அது சரியென்றான பெரு விளக்கம் ஒன்றை தந்தார். சுமந்திரன் என்ற ஆளுமை விம்பம் வயலில் உழுதுண்டு நடித்த போது ஆதரவாளர் மத்தியில் விம்பம் சரிய தொடங்கிவிட்டது. இது ஓர் உதாரணம் தான். நிறைய உதாரணங் கள் உண்டு ஆனாலும் அவர் வென்றிருக் கலாம் எப்படி என்றால் வீட்டுக்குள் தமிழரசாக தேர்தல் கேட்கும் போது வந்த வேட்பாளர் விண்ணப்பங்களை ஆவது சரிபார்த்து சரியாக கையாண்டு எல்லா தரப்பினரோடும் சேர்ந்தியங்கி வென்றிருக்கலாம் . ஆனால் என்ன நடந் தது சிறிதரன் தரப்பால் வந்த விண் ணப்பங்கள் மாவை தரப்பால் வந்த விண் ணப்பங்கள் அனைத்தையும் பார்க்கா மலே குப்பைத் தொட்டிக்குள் தூக்கி கடாசி எறிந்தார். சிறியர் தவிர்ந்த தான் முன்னரே வாக்குறுதியளித்த அத்தனை விசுவாசிகளுக்கும் அத்துடன் முகபுத் தகத்தில் செம்படிப்போருக்கும் என 7 பேரை அனுமதித்தார். அவ்வளவு பேருமே மக்கள் மத்தியில் செல்வாக் கற்றவர்கள். சிலரை மக்களுக்கே யார் என்றே தெரியாதவர்கள். ஆனால் மக்கள் அனைத்தையும் அவதானமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவரின் அரசியல் சூத்திரம் என்னவென்றால் ஒருபக்கம் சிறியரின் வீட்டுக்கு விழும் வாக்குகள் கட்சிக்கு மாறும் அதைவிட அந்த தலை யாட்டி பொம்மைகளும் ஒரு வாக்கு வட்டாரம் வைத்திருப்பார்கள் அந்த 7 பேரும் ஓடித்திரிந்து சேருக்கும் என வாக்கு கேட்டால் தலா ஆளுக்கு மிகக் குறைந்தது ஒரு 3000 வாக்கு எடுத்தாலே 21000 வந்திடும், அத்தோடு சுமந்திரன் என்ற நபருக்கான வாக்கு வங்கி என எல்லாம் கூட்டி கழித்து பார்த்ததில் வெற்றி உறுதி செய்யப்பட்டு ஒரு கற்பனை மேகத்தில் வலம் வந்தார். தமிழ் மக்கள் ஒன்றும் அவரை செம்படிபோர் போன்ற முட்டாள்கள் அல்ல என்பதை அவர் உணர மறந்துவிட்டார். இறுதியில் சுமந்திரன் என்ற மாபெரும் விம்பம் முற்றாகவே உருக்குலைந்து போனது.

நாமெல்லாம் வியந்து அண்ணாந்து பார்த்த ஆளுமை இப்படி வீழ்ந்து கிடக் கையில் நெஞ்சணாத் துயராகதான் இருக்கிறது. ஆனால் அவர் செய்த கர்ம வினை அவரையே காவு கொண்டது. அவர் பிறருக்காக செம்பு காவிகளுடன் சேர்ந்து இரவு பகலாக வெட்டிய பொறிக்கிடங்கில் அவரே இறுதியில் வீழ்ந்தார். ஈற்றில் சுமந்திரன் என்ற பெரும் ஆளுமை விம்பத்தை வீழ்த்திய வர்கள் அவர் கட்டமைத்த செயற்கை யான விசுவாச கூட்டம். உயிர்போன பிணத்தில் இருந்து ஒவ்வொரு பேனாக கழன்று போவது போல் ஒவ்வொரு பேனும் உண்ணியும் கழன்று போய் கொண்டிருக்கிறது. ஆனால் செத்து போனதென்னவோ சிறந்த ஆளுமை!!.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இறுதிக் கிரியைகள் இல்லாமலே மாகாண சபைகள் அடக்கமாகும்!

பனங்காட்டான்

இலங்கை அரசியலில் கடந்த இரண்டு மாதங்களாக பெருமளவில் பேசப்படும் மூன்றெழுத்து ஏகேடி என்பது. புதிய ஜனாதிபதி அநுர குமார திஸ்ஸநாயக்கவின் பெயரின் முதல் ஆங்கில எழுத்துகளிலானது இது.

ஆனால், கடந்த ஒரு வாரத்துக்குள் இன்னொரு பெயர் ஆட்சித்தரப்பில் திடீரென பிரபல்யமாகியுள்ளது. அநுரவின் தேசிய மக்கள் சக்தியின் தாய் அமைப்பான ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளராக விளங்கும் ரில்வின் சில்வாவின் பெயரே அது.

மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வருவோம் என்ற அறிவிப்பின் ஊடாக ஊடகங்கள் இவரை பிரபல்யமாக்கியுள்ளன. 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் ராஜிவ் காந்தியும் செய்து கொண்ட இணக்கத்தில் பிரபலமாகி, 37 வருடங்கள் ஆகியும் குறைமாத குழந்தையாகவிருக்கும் மாகாண சபைக்கு முடிவு கட்டப்படுமென பகிரங்கமாக அறிவித்ததால் இப்போது இவர் பக்கம் பலரது பார்வையும் திரும்பியுள்ளது.


ஜே.வி.பி.யில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த உறுப்பினர்கள் இருவரில் ரில்வின் சில்வா முக்கியமானவர். ஜே.வி.பி. தோழர்கள் தம்மை லொக்கு ஐயா (பெரிய அண்ணை) என்று அழைப்பார்கள் என்று அண்மைய செவ்வி ஒன்றில் இவரே குறிப்பிட்டிருந்தார். மற்றைய மூத்த உறுப்பினர் ஜினதாச கிட்டுலேகொட. இவர்கள் இருவரும் எழுபதுகளிலிருந்தே ஜே.வி.பி.யில் இயங்கி வருபவர்கள். இவர்கள் தேர்தல்களில் போட்டியிடாதவர்களும் கூட.

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து தாம் விலகப் போவதாக சில வாரங்களுக்கு முன்னர் ரில்வின் சில்வா அறிவித்திருந்தார். தற்போது அமைச்சராகவிருக்கும் பிமல் ரத்நாயக்க என்ற மூத்த தோழர் இப்பதவிக்கு நியமனமாகப் போவதாகவும் செய்திகள் வந்த நிலையில், மாகாண சபைகளுக்கு மூடுவிழா என்ற அறிவிப்பை ரில்வின் சில்வா வெளியிட காரணம் என்ன?

தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு அநுர குமார திஸ்ஸநாயக்க என்னும் ஒற்றை மனிதரே முதன்மைக் காரணமென பிரபல்யமாகியுள்ள வேளையில், தேர்தல் வெற்றிக்கு தனிப்பட்ட உரிமை கோர எவரும் முடியாது என்று ரில்வின் சில்வா அண்மையில் அளித்த செவ்வி ஒன்றில் தெரிவித்த கருத்தின் சலசலப்பு ஓய்வதற்குள், மாகாண சபைகள் ஒழிக்கப்படுமென்ற கருத்தை இவர் வெளியிட்டதன் பின்னணி பற்றி பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன.

மாகாண சபை முறைமை முடிவுக்குக் கொண்டு வரப்படுமென்று தாம் குறிப்பிடவில்லையென்றும், தமது சொல்லாடலை வேறு அர்த்தத்தில் ஊடகங்கள் கையாண்டிருப்பதாகவும் அறிக்கை வாயிலாக ரில்வின் சில்வா தெரிவித்துள்ளாராயினும், மாகாண சபை முறைமை அகற்றப்படுமென்பது ஓரளவுக்கு வெளிச்சமாகிவிட்டது என்பது மறைக்க முடியாத உண்மை.

இவ்விவகாரம் பற்றி இப்பத்தியின் பிற்பகுதியில் மேலும் விரிவாகப் பார்ப்போம். அதற்கு முன்னர், அநுர குமார தலைமையிலான தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசமைப்பு பற்றி ரில்வின் சில்வா கூறிய இன்னொரு கருத்தும் பரவலாக முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளது. தற்போதைய ஆட்சியை இலங்கையின் முதலாவது மாக்சிஸ அரசு என்றே உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் அழைத்து வருகின்றனர். அதாவது, இதனை இடதுசாரி அரசு என்று தெரிவிக்கின்றனர். இதனை ஒருபோதும் அநுர குமார மறுக்கவில்லை. ஆனால், கொழும்பு டெய்லி மிரருக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், தற்போதைய அரசாங்கம் இடதுசாரி அரசாங்கம் அல்ல என் றும், இது இடதுசாரி - ஜனநாயக - முற் போக்கு சக்திகளின் அரசாங்கம் (Ours is not a leftist Government, but one of leftist democratic and progressive forces) என்று புதிய நாமம் சூட்டியுள்ளார் ரில்வின் சில்வா.



> இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து, வடக்கு-கிழக்கு மாகாண சபைகளை இணைப்பதை சட்டப்படி ரத்தாக்கி அட்டகாச அரசியல் செய்த ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் மாகாண சபைகள் புத்துயிர் பெறுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அமைதியான அடக்கமே இறுதியில் இடம்பெறும்.

பிரித்தானிய சாம்ராஜ்யத்திலிருந்து இலங்கை 1948ல் விடுவிக்கப்பட்டபோது டொமினியன் ஆஃப் சிலோன் என்ற பெயரைப் பெற்றது. 24 வருடங்களின் பின்னர் 1972 மே மாதம் 22ம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பின் ஊடாக சிறிலங்கா குடியரசு என பெயர் மாற்றம் பெற்றது.

1977ல் ஆறில் ஐந்து பெரும்பான்மை யுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன தம்மை தர்மிஷ்டர் என அழைத்துக் கொண்டு தமது பங் குக்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் தமது விருப்புக்கு ஏற்ற பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய அரசியலமைப்பை உருவாக்கினார். 1978 செப்ரெம்பரில் ஜனநாயக சோசலிஸ குடியரசு என்ற பெயரோடு இவரது புதிய அரசியலமைப்பு பிரகடனமானது.

ஆக, 1948 முதல் 1978 வரையான முப்பது ஆண்டுகளில் இலங்கை என்பது அரசியல் யாப்பு ரீதியாக மூன்று வெவ்வேறு பெயர்களுக்கு மாற்றம் கண்டது. இப்போது, அநுர குமார அரசு புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இது நடைமுறைக்கு வருமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் எவ்வாறு அமையுமென்பதை முற்கூட்டியே ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார் என்று சொல்வதற்கு ஏதுவாக அவர் ஒரு பெயரை முன்வைத்துள்ளார்.

அநுர குமார என்ன சொன்னாலும், எதனைச் செய்தாலும் அவர் ஜே.வி.பி.யின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டவராக இருக்க வேண்டுமென ரில்வின் சில்வா கருதுகிறார் அல்லது எதிர்பார்க்கின்றார் என்பதை இதனூடாக பார்க்க முடிகிறது.

ரோகண விஜேவீர தலைமையில் உருவாகி தொடர்ந்து மறைந்தும் பகிரங்கமாகவும் இயங்கிய ஜே.வி.பி. அமைப்பின் நான்காவது தலைவராக இருந்தவர் சோமவன்ச அமரசிங்க. பாதுகாப்புக் காரணங்களுக்காக நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலையில் அவரால் ஐந்தாவது தலைவராக நியமிக்கப்பட்டவர் அநுர குமார திஸ்ஸநாயக்க. பேச்சாலும் செயலாலும் அநுர குமார உயர்ந்தவராக சோமவன்சவின் பார்வைக்கு தெரிந்ததால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

2014ம் ஆண்டில் தலைமைப் பதவியைப் பெற்ற அநுர குமார திஸ்ஸநாயக்க ஒரு தசாப்தத்துக்குள்ளேயே அனைவரும் வியக்கத்தக்க வகையில் தேர்தல் வெற்றிகளை குவித்தார். எனினும், இவரை தாய் அமைப்பான ஜே.வி.பி.யின் பிடிக்குள் கட்டுப்படுத்துவது மட்டுமன்றி அனைத்து விடயங்களிலும் மட்டுப்படுத்தும் எண்ணம் ரில்வின் சில்வாவிடம் இருப்பதை மற்றைய தோழர்கள் கண்டு கொண்டனர்.

இந்தப் பின்னணியில் மாகாண சபை விவகாரம் பற்றி ரில்வின் சில்வா தெரிவித்த கருத்து பலரதும் அவதானத்துக்குள்ளானது. அநுர குமாரவின் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாகாண சபைகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. புதிய அரசியலமைப்பினூடாக இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுமென்று மேலோட்டமாக மட்டும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாகாண சபை முறைமை தொடருமா இல்லையா என்று அநுர குமாரவோ அவரின் அமைச்சர்கள் அல்லது எம்.பிக்களோ இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களைத் தொடர்ந்து மாகாண சபை தேர்தல்கள் இடம்பெறுமென்றும், இப்போது அச்சபைகளுக்கு என்ன அதிகாரங்கள் உள்ளனவோ அவை இருக்குமெனவும் எந்தப் பக்கமும் முட்டுப்படாமல் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வந்தது.

காணி மற்றும் காவற்துறை அதிகாரங்கள் இல்லாமலே மாகாண சபைகள் தொடர்ந்து இயங்குமென இதனை ஊகித்துக் கொள்ள முடிந்தது. இந்த இழுபறி நிலையில் ஒரேயடியாகப் போட்டுடைத்தவர் ரில்வின் சில்வாதான். இதனை எதற்காக மூடி மறைக்க வேண்டுமென்று அவர் எண்ணியிருக்கலாம். அல்லது ஜனாதிபதி அநுர குமாரவால் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது தத்தளிக்கும் மாகாண சபை விவகாரத்தை தாமே அறிவித்து விடுவோம் எனவும் அவர் நினைத்திருக்கக் கூடும்.

எதுவோ, பூனை சாக்குக்குள்ளிருந்து வெளியே வந்துவிட்டது. மாகாண சபையால் எதுவும் ஆகாது என்று தேர்தல் காலத்தில் சமஷ்டி உரிமை கேட்ட கட்சிகள் இப்போது மாகாண சபைகள் தொடர வேண்டுமென்று கேட்கிறார்கள். பதின்மூன்றாம் திருத்தத்தில் மாகாண சபை உருவாக்கத்தில் முக்கிய பங்கெடுத்து இரு நாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியா மௌனம் காக்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் எனப்படுவது ராஜிவ் காந்தியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் ஒப்பம் இட்டவை என்ற நோக்கிலும், அவர்கள் இருவரும் இன்று உயிரோடு இல்லை என்ற பார்வையிலும் மோடி அரசு பதின்மூன்றாம் திருத்தத்திலும் மாகாண சபை முறைமையைத் தொடருவதிலும் அக்கறை காட்டுவதாக இல்லை. தமிழர் தரப்பு பிரதிநிதிகளுடன் இந்தியத் தரப்பு பிரமுகர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டை நேரடியாகவும் மறைமுகமாகவும் தெரியப்படுத்தியுள்ளனர்.


புதிய அரசியலமைப்பு உருவாக மூன்று வருடங்கள் ஆகலாமென்றும், அதுவரை மாகாண சபைகள் இயங்குமெனவும் அநுர அரசு தரப்பினர் தமிழரசாருக்கு ஆறுதல் கூறியுள்ளனர். பன்முகப்படுத்தப்பட்ட அரசாட்சி முறையில், மாவட்ட ரீதியாக தெரிவான எம்.பிக்களை உள்வாங்கி அந்தந்த மாவட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் திட்டம் அநுர அரசிடம் இருப்பது தெரியவந்துள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மாகாண சபைகளுக்கு லைவ் சப்போர்ட் எனப்படும் இயங்குநிலை வழங்கப்படும். அதுவரை உயிராபத்து இருக்காது. அதன் பின்னர், இறுதிச் சடங்குகளோ கிரியைகளோ இடம்பெறாது ஆரவாரமின்றி அது அடக்கம் செய்யப்படும். அதற்கான முன்னறிவித்தலாகவே ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவின் அறிவிப்பை பார்க்க வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவல்கணன்

# எழுத்துலகில் புதிய பிரவேசங்கள்: கூகுள் எழுத்தாளர்கள்




சேர, சோழ, பாண்டிய மன்னர் காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களைக் கல்லிலும் செப்பேடுகளிலும் மீளப் பதிவெடுக்கப்பட்ட ஓலைகளிலும் இன்றும் காணலாம். காகிதங்களில் கதைகள் எழுதி வாரப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்த (வயது முதிர்ந்த) எழுத்தாளர் ஒருவர் தனது இளமைக் காலத்தில் தன் கைப்பட எப்படி காகிதங்களில் கதைகளை எழுதும் போது நாற்பத்தி மூன்றாம் வரியில் ஒரு பிழை விட்டால் முதல் வரியிலிருந்து மீண்டும் எழுத வேண்டும் என்ற வேதனையை என்னிடம் சில வருடங்களுக்கு முன்னர் பகிர்ந்து கொண்டார்.

பின்னர் தட்டச்சு வந்த போதும் அந்தச் சிக்கல் தொடர்ந்தது என்றும், நினைவாற்றல் வல்லமை கொண்ட தட்டச்சுகள் வந்த பின்னர்தான் அதிலிருந்து சற்று விமோசனம் கிடைத்தது என்றும் கணினிகளில் பாவனை பிரபலமாகிய போது அவர் எழுத்துலகிலிருந்து விலகி விட்டதாகக் கூறி, அப்போது அங்கலாய்த்தார்.

இப்பொழுது எழுத்தாளார்களாக மாறி விட்டவர்கள் பலருக்கு அந்த மூத்தவர் கூறியவையெல்லாம் என்னவென்று தெரிய வேண்டிய அவசியமே இல்லை. அதற்காக அந்த எழுத்தாளர்கள் மீது கோபம் கொள்வது தேவையில்லாதது. அவர்கள் கைகளில் காகிதமும் பேனாவும் இல்லை என்பது மட்டுமல்ல, சந்திரனுக்கு மனிதனை அனுப்ப பயன்பட்ட கணினிகளின் திறனைவிட பன்மடங்கு அதிக திறன் கொண்ட கருவிகள் அவர்கள் கைகளுக்குள் அடங்கியிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, புதிய தலைமுறை எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை உருவாக்க தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்துகின்றனர். அவர்களது எழுத்துகளுக்கு அவை மெருகூட்டுகின்றன, சில அவர்களை சோம்பேறிகளாக்கி விடுகின்றன. அவர்களின் வசம் உள்ள பல்வேறு கருவிகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ChatGPT, Bard, Copilot போன்ற செயலி கள் மற்றும் 'இணைய தேடலுக்கு' என்பதைத் தனது அடையாளமாகக் கொண்டுள்ள தொழில்நுட்ப நிறுவனமான கூகிள் நிறுவனத்தின் வேறு செயலிகள் இல்லையென்றால் தற்கால எழுத்தாளர்களில் பலர் தம்மை எழுத்தாளர்கள் என்றே கூற முடியாமல் போயிருக்கும். எப்படி? அந்தத் தேடலின் விளைவுதான் இந்தக் கட்டுரை.

**முக்கிய குறிப்பு:** இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு எந்தவித செயற்கை நுண்ணறிவின் உதவியுமின்றி சுய அறிவு மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

முன்னர் கூறிய மூத்த எழுத்தாளர் போல் காகிதத்தில் பேனாவால் எழுதவோ, தட்டச்சு செய்யவோ புதிய எழுத்தாளர்களுக்குத் தேவையில்லை. மின்னஞ்சல் மூலம் பிரதிகளை முன்னும் பின்னுமாக அனுப்பும் நாட்களும் போய்விட்டன. எழுத்தாளரும் அவர் எழுதுவதைப் பிரசுரிப்பவரும் அல்லது அந்த இதழின் ஆசிரியரும் ஒரே நேரத்தில் ஓர் ஆவணத்தில் வேலை செய்யலாம், நிகழ நேர கருத்து பரிமாற்றம், திருத்தங்கள், மாற்றங்களை செய்யலாம். இந்தக் கூட்டு அணுகுமுறை, எழுத்து செயல்முறையை நெறிப் படுத்துவது மட்டுமல்லாமல், உலகின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் கால விரயமின்றி கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளலாம்.

இந்த எண்ம யுகத்தில், பரந்த அளவிலான தகவல் களஞ்சியத்தை ஆசிரியர்கள் தங்கள் விரல் நுனியில் வைத்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் நூலகத்தில் பல மணி நேரம் செலவிட்டு செய்யப்படும் ஆராய்ச்சி இப்போது சில நிமிடங்களில் நடத்தப்படலாம். எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய விடயங்களின் உண்மைத் தன்மையை சரிபார்க்கலாம், தெளிவற்ற விபரங்களை ஆராயலாம். மற்றும் மின்னலெனப் பாய்ந்து வரும் புதிய யோசனைகளை ஒரு சில விசை அழுத்தங்கள் மூலம் ஆராயலாம். இதனால், எழுத்தில் துல்லியத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பல்வேறு கண்ணோட்டங்கள் மற்றும் தகவல்களை எழுதுவதன் மூலம் பல எழுத்தாளர்களின் படைப்பாற்றல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மாறிவரும் வாசகர் விருப்பங்களையும் தற்போதைய போக்குகளையும் நொடிக்கு நொடி புரிந்து கொள்வதன் மூலம் நவீன எழுத்தாளர்கள் தம் வாசகர்களின் எதிர்பார்ப்புகளை இலகுவாகப் பூர்த்தி செய்ய முடிகிறது.

தெளிவான மற்றும் துல்லியமான தரவுகளை உலகின் ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டு இன்னொரு நாட்டிலிருப்பது போன்று நம்பகத்தன்மையுடன் எழுத முடியும். எந்த இடத்தைப் பற்றியும் விரிவாக ஆராயவும், அந்த இடத்தின் சாரத்தைப் படம் பிடித்து, அதனை நம்பகத்தன்மையுடன் விபரிக்கவும், அதன் மூலம் வாசகர்களை ஒரு செழுமையான உணர்வு அனுபவத்தில் மூழ்கடிக்கவும் தற்போதைய எழுத்தாளர்களால் முடியும். அதற்கு அவர்கள் இருக்கும் இடத்தை விட்டு வேறெங்கும் பயணிக்க வேண்டிய தேவை இல்லை,

தற்போதைய தொழில்நுட்பம் எழுத்தாளர்களுக்கு எழுதுவதற்கு எப்படி உதவிபுரிகிறதோ அதைவிட ஒரு படி அதிகமாகச் சென்று அவர்கள் எழுத்தை வாசகர்களிடம் கொண்டுபோய் சேர்க்கிறது. பல எழுத்தாளர்கள் தாம் படைத்தவற்றை வலைப்பதிவுகளிலும், தமது சொந்த இணையத் தளத்திலும் இலகுவாக வெளியிட முடியும். அதற்கும் அப்பால், அவர்களுக்கு காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட நூல் வடிவம் தேவை என்றால், இலகுவாக அவற்றைப் பதிப்பித்துக் கொள்ளவும் ஆயிரக்கணக்கானவர்கள் காத்திருக்கிறார்கள். தேவைக்கேற்ப அச்சிடும் சேவைகள் (Print On Demand) பல்கிப் பெருகியிருப்பதால், முன்னர் போல ஆயிரம் இரண்டாயிரம் என்று புத்தகங்களை அச்சிட்டு அவர்கள் வீடுகளில் அவை அடைந்து கிடக்க வேண்டியதில்லை. அதுமட்டுமின்றி, அச்சிலிருப்பது போலவே மின்புத்தகங்களாகவும் நவீன எழுத்தாளர்கள் தமது படைப்புகளை இப்பொழுது வெளியிட முடியும். றூாயவளயுரீ குழுக்களை உருவாக்கி அவற்றைப் பலருடன் பகிரவும் முடியும்.

இவையெல்லாம் ஒரு படைப்பாளிக்கு உதவியாக அமைந்து, அவர்கள் எழுத்துப் பணியை இலகுவாக்கும் அதே வேளை, இதே தொழில்நுட்ப மாற்றங்கள் சில புதிய எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளது.

மோசடியின் மிக அப்பட்டமான வடிவங்களில் ஒன்று மற்றவர் ஆக்கங்களைத் 'தமது' என்று பிரசுரிப்பது. சில 'சோம்பேறி' எழுத்தாளர்கள் அல்லது எதுவுமே எழுதும் ஆற்றல் இல்லாதவர்கள் அதைத்தான் செய்கிறார்கள். தற்போதைய தொழில்நுட்பம் அவர்கள் வேலையை இலகுவாக்கிவிட்டது. இது, கருத்துருவாக்கத்திலிருந்து, பந்தி பந்தியாக மற்றவர் எழுத்துகளை அப்படியே தூக்கி எந்த மாற்றமும் செய்யாமல் தமது எழுத்தாக்கங்களில் சேர்த்துக் கொள்வது என்று பல்வேறு வகைகளில் உருப்பெறுகிறது.

இப்போது இன்னொரு வகையான 'திருட்டு' எழுத்தாளர்கள் உருவாகி வருகிறார்கள். ஆங்கிலத்தில் வெளிவரும் ஆக்கங்களை கூகுள் மொழிபெயர்ப்பில் மாற்றம் செய்து, அதனை தாங்களே எழுதியதுபோல தங்கள் பெயரில் வெளியிட்டு வருகின்றனர். கட்டுரையின் இறுதியில் ஆதாரம் என்று அதன் மூலத்தைக் குறிப்பிட்டு தப்பி விடுகிறார்கள். உண்மையில் இதனை ஆதாரம் என்று போடுவது எழுத்துத் திருட்டை மறைக்கும் சூத்துமாத்து.

> “இந்த எண்ம யுகத்தில், நவீன தொழில்நுட்ப வளர்ச்சி பல்வேறு வடிவங்களில், படைப்பாற்றலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்கென்றே தோன்றியுள்ளன. பலர் அவற்றைப் பொறுப்புடன் பயன்படுத்தினாலும், இதன் இருண்ட பக்கமும் சில எழுத்தாளர்கள் வழியாக வெளியே தெரிகிறது.”

இப்பொழுது பலர் ஆங்கிலக் கட்டுரைகளை பொறுக்கியெடுத்து முதல் பந்தியிலும் இறுதிப் பந்தியிலும் சில மாற்றங்களைச் செய்துவிட்டு மிகுதி முழுவதையும் கூகுளில் மொழிபெயர்த்து தங்கள் பெயரில் அவைகளை வெளியிட்டு வருவது தங்களுக்குத் தாங்களே முதுகு சொறிவது போன்றது.

இப்படி செய்வதன் மூலம் அப்படியான எழுத்தாளர்கள் தமது நேர்மையை சமரசம் செய்வதோடு நின்று விடவில்லை. மற்றவர்களின் அறிவுசார் சொத்துகளையும் களவாடுகிறார்கள். இவ்வாறு செய்வது தண்டனைக்குரிய குற்றமென்பதை இவர்கள் அறியவில்லைப்போலும்.

குறிப்பிட்ட முக்கிய வார்த்தைகள் அல்லது தலைப்புகளின் அடிப்படையில், தானாக உருவாக்கும் தொழில்நுட்ப செயலிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ChatGPT, Bard, Copilot போன்ற செயலிகளைப் பயன்படுத்தி, சில ஆசிரியர்கள் தமது ஆக்கங்களைப் படைக்கின்றனர். இந்த செயலிகள் பெரும்பாலும் பல்வேறு மூலங்களிலிருந்து தகவல்களை ஒன்றாக இணைத்து, புதிதாக எழுதப்பட்டது போன்ற ஒரு ஆக்கத்தை உருவாக்கிக் கொடுக்கின்றன. எழுதுபவரின் வேலையை இது விரைவு படுத்தும் என்பது உண்மைதான். ஆனால், அவர்களது படைப்பின் மதிப்பைக் குறைப்பதுடன் அவர்களது படைப்பாற்றல் மீதான நம்பகத்தன்மையை குறைக்கின்றது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஒரு வாதத்தை ஆதரிக்க, அல்லது அதனை வலுப்படுத்த மேற்கோள்களைக் கண்டுபிடிப்பதை Google போன்ற தேடல் செயலிகள் எளிதாக்குகின்றன. இருப்பினும், சில ஆசிரியர்கள் இதைப் பயன்படுத்தி மேற்கோள்களை இட்டுக் கட்டி, அல்லது ஒருபோதும் செய்யப்படாத ஆராய்ச்சிகளை ஆதாரங்களாகக் காட்டி, நம்பகமாகத் தோன்றக்கூடிய அறிக்கைகளை எழுதுகிறார்கள். இந்த ஏமாற்றும் நடைமுறை வாசகர்களை தவறாக வழிநடத்தி, அந்த ஆசிரியர் மீதான நம்பிக்கையை சிதைத்து விடும்.

சில எழுத்தாளர்கள், சமூக வலைத் தளங்களில் பல போலி அடையாளங்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் போலத் தெரிகிறது. இந்த போலி அடையாளங்களுடன் அவர்கள் தமது படைப்புகளுக்கு புனையப்பட்ட ஒப்புதல்கள், மதிப்புரைகள் போன்றவற்றை எழுதுவதுடன் அவர்களது சொந்தப் படைப்புகளுக்கு இந்தப் போலி அடையாளங்கள் மூலம் விளம்பர நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள் போல் தெரிகிறது. ஒரு ஆசிரியரின் வெற்றியில் நேர்மறையான மதிப்புரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால், சில எழுத்தாளர்கள் தங்கள் சொந்த படைப்புகளுக்கு ஒளிரும் மதிப்புரைகளையும் போட்டியாளர்களுக்கு எதிர்மறையான விமர்சனங்களையும் முன் வைப்பது, வாசகர்களை ஏமாற்றுவது மட்டுமல்லாமல் விமர்சனங்கள் அல்லது பின்னூட்டல்கள் மீதான நம்பகத்தன்மையையும் சேதப் படுத்துகிறது.

நான் சந்தித்த அந்த மூத்த எழுத்தாளருக்கு இருந்த எந்தவொரு பிரச்சனையும் தற்போதைய எழுத்தாளர்களுக்கு இல்லை என்பது உண்மைதான். அதற்கும் மேலாக, இந்த எண்ம யுகத்தில், நவீன தொழில்நுட்ப வளர்ச்சி பல்வேறு வடிவங்களில், படைப்பாற்றலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்கென்றே தோன்றியுள்ளன. பலர் அவற்றைப் பொறுப்புடன் பயன்படுத்தினாலும், இதன் இருண்ட பக்கமும் சில எழுத்தாளர்கள் வழியாக வெளியே தெரிகிறது. அவர்கள் எழுத்தாக்கங்களைப் படிக்கும் போதெல்லாம் எனக்கு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின், "திருடராய்ப் பார்த்து திருந்தா விட்டால், திருட்டை ஒழிக்க முடியாது" என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைவெள்ளமும் மக்களும்: பூனைக்கு மணிகட்டுவது யார்?



கந்தையா அருந்தவபாலன்

இயற்கையாகவோ அன்றிச் செயற்கையாகவோ மக்களுக்குப் பாதிப்பேற்படும் சந்தர்ப்பங்களில் ஒருபுறத்தில் அவைபற்றிய ஆய்வுகள், விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள் வலம்வரும்போது மறுபுறத்தில் அப்பாதிப்புக்களிலிருந்து மக்கள் தற்காலிகமாக மீள்வதற்கான நிவாரண நடவடிக்கைகள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களாலும் தனியாட்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன. அவை சில நாட்களில் மறந்து போய்விடுகின்றன. மீண்டும் அதேபோன்ற பாதிப்புகள் ஏற்படும்போது மீண்டும் அதேபோன்ற செயற்பாடுகள். இதுவே எமது அண்மைக்கால வரலாறாகிவிட்டது. இவ்வாறான பாதிப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படாது தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்வதற்கும் அவற்றையும் தாண்டி பாதிப்புகள் ஏற்படும்போது அதை எதிர்கொள்வதற்குமான நிலையான கட்டமைப்புகளைப் பேணுவதற்கும் நாம் தவறிவிடுகிறோம் என்பதுதான் யதார்த்தம்.

இது குடாநாட்டில் அடிக்கடி ஏற்படும் வெள்ளமும் அதனால் மக்கள் படும்பாடுகளுக்கும் பொருந்தும். வழமையான பருவமழையின்போது குறைந்தளவிலும் அக்காலத்தில் தோன்றும் கடும்புயல் மழையால் அதிகளவிலும் மக்கள் தொடர்ந்து பாதிப்படைந்து வருகின்றனர். பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 25-26 ஆம் திகதிகளில் இலங்கையின் வடபுலத்தைத் தாக்கிய 'நிஷா' புயல் மற்றும் மழையினால் யாழ்மாவட்டத்தில் மட்டும் 15 பேர் உயிரிழந்ததுடன் ஒரு இலட்சத்துக்கும் அதுகமானோர் இடம் பெயர்ந்துமிருந்தனர். அதன்போது 500 மி.மீ க்கும் அதிகமான மழைவீழ்ச்சி இங்கு பதிவாகியிருந்தது. தற்போது அதேபோன்றதொரு பாதிப்பு 'பெங்ஜல்'புயல் மழையினால் வடகிழக்கில் ஏற்பட்டுள்ளது. எனினும் அது முற்றுப்பெறவில்லை. புயல் மற்றும் வெள்ளம் இன்னும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக எதிர்வு கூறப்படுகிறது. ஏலவே மழைவெள்ளம் நிரம்பியிருக்கும் சூழ்நிலையில் இன்னொரு பெருமழை பெய்யுமானால் இன்னும் பாதிப்புகள் அதிகமாகும். கடந்த புயல்மழையால் தரை பெற்றிருந்த 100 வீத மண்ணீர்க் கொள்ளவில் கிட்டத்தட்ட 3 வீதம் மட்டுமே ஆவியாதலால் குறைவடைந்துள்ள இன்றைய நிலையில் மீண்டும் குறைந்தது 30 மி.மீ மழைக்கு மேல் கிடைத்தாலே வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என யாழ் பல்கலைக்கழகப் புவியியல் பீடத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எதிர்வு கூறியுள்ளதுள்ளதுடன் சகல தரப்புகளின் அவதானத்தையும் வேண்டியுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது.




யாழ்ப்பாணக் குடாநாடு மிகச்சிறிய ஒரு நிலத்தொடர்பை மட்டும் கொண்டு முழுமையாகக் கடலால் சூழப்பட்டிருந்தும்கூட ஏன் இங்கு வெள்ளப்பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது? புவியியல் ரீதியாகப் பல காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டாலும் அவற்றிற்கமைய நாம் செயற்படத் தவறியமையே பிரதான காரணம். அந்தவகையில் இங்கு இருவிடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று குடாநாட்டுக்கான திட்டமிடப்பட்ட முழுமையான வடிகாலமைப்பொன்று இதுவரையும் அமைக்கப்படாமை. இரண்டாவது இயல்பான வடிகாலமைப்புகளைத் தடுக்கும் வகையிலான மனித செயற்பாடுகள். குடாநாட்டில் யாழ்ப்பாணம் உட்பட சில நகரப்பகுதிகளைத் தவிர வெள்ளம் தங்கும் ஏனைய பிரதேசங்களில் இலகுவான வழிகளில் குறைந்த நிதிச்செலவுடன் நிலையான வடிகாலமைப்புகளைச் செய்யமுடியும். நகரப்பகுதிகளில் அவ்வாறு அது இலகுவானதல்ல. அதிலும் குறிப்பாக யாழ் நகரமும் அதையண்டிய பகுதிகளிலும் வடிகாலமைப்பதற்கு சிறந்த தொழில்நுட்ப, திட்டமிடலும் அதிகளவான நிதியும் தேவைப்படும். அத்துடன் நகரப்பகுதிகளுக்குத் தனித்தோ அல்லது ஏனைய பிரதேசங்களுக்குத் தனித்தோ வடிகாலமைப்புகளை மேற்கொண்டாலும் அவையாவும், குடாநாடு முழுமைக்குமான ஒன்றிணைந்த ஒருகுடைத் திட்டத்தின் கூறுகளாக அமைய வேண்டும். ஏலவே யாழ் மற்றும் சாவகச்சேரி போன்றவற்றை திட்டமிட்டமுறையில் நகராக்கம் செய்வதற்கான தொடக்க மட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் பல்வேறு தடைகள் காரணமாக அவை கைகூடாமல் போய்விட்டன. இவ்வாறான திட்டங்களுக்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புக்களிடமிருந்தும் உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளுண்டு. ஆனால் அதற்கு பொருத்தமான அரசியல் நிர்வாக முன்னெடுப்புக்கள் அவசியமாகும்.

ஒன்றிணைந்த வடிகாலமைப்பு அமைக்கப்படவேண்டியது கட்டாயமெனினும் இயல்பான வடிகாலமைப்புகளை இயன்றவரை அவ்வாறே நாம் பேணுவதன்மூலம் பாதிப்புகளின் அளவு இயன்றவரை குறைக்கமுடியும். கடந்தகாலத்தில் இயல்பாக இருந்துவந்த மழைவெள்ளம் வடிந்தோடும் வழிகள் பலவகையில தொடர்ச்சியாகத் தடுக்கப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடியும். குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள், அவற்றுக்கான சுற்று மதில்கள், வீதி அமைப்புகள், தாழ் நிலைப் பகுதிகளில் குடியிருப்புகளை ஏற்படுத்துதல், நீரேந்தும் பகுதிகளை சீராகப் பேணாமை, அவற்றை ஆக்கிர மித்தல் போன்ற பல மனித செயற்பாடுகள் இங்கு முக்கியம் பெறுகின்றன. நிலையான கட்டடங்கள் [illegible] அமைப்பதற்கு அனுமதி வழங்குதல், கண்காணித்தல் போன்றவற்றுக்கு உள்ளூராட்சி மன்றங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிருத்தி அதிகாரசபை போன்ற பல நிறுவனங்கள் இருந்த போதும் முறையற்ற கட்டிடங்கள் எவ் வாறு உருவாகின்றன. இவை ஒன்றி ணைந்த தேவைகளைக் கருத்தில் கொள் ளாது தனித்தனி விடயங்களை கவனத் தில் கொள்வது முக்கிய பலவீனமாக உள்ளது. எடுத்துக்காட்டாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதான வீதியிலிருந்தான நியமதூரம், பிரதான மின்சார வடங்கள் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளும் அதேவேளை அமையவிருக்கும் கட்டிடத்தால் நீர்வழிந்தோடலில் ஏற்படக்கூடிய பாதிப்புத் தொடர்பாகக் கவனிக்கிறதா என்பது கேள்விக்குறியே. அதேபோல மதிலொன்று அமைக்கும்போது உள்ளூராட்சிமன்றம் வீதியிலிருந்தான தூரம், அயலவரின் ஒப்புதல் என்பவற்றுடன் அதற்கான கட்டணத்தில் அதிக அக்கறை செலுத்துவது போல குறித்த மதில் மழைநீரோட்டத்தைத் தடுக்குமா, அவ்வாறாயின் மதிலில் அதற்கான ஏற்பாடுகள் என்ன என்பதில் அதிக கவனம் செலுத்துவதில்லை.




ஊழலை அகற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கும் அரசாங்கத்தின் வடபகுதிக்கான முதன்மை அதிகாரி என்றவகையில் ஆளுநர் இனிவரும் காலத்திலாவது சட்டவிரோதமாக அனுமதிக்கப்படும் கட்டிடங்கள் எழாமல் தடுக்கவேண்டும். அதற்கு மேலாக குடாநாட்டுக்கான சிறந்த வடிகாலமைப்பு முறை ஒன்றை உருவாக்குவற்கு அவர் முயலவேண்டும்.

வீதியமைப்புகளும் அப்படியே. முன்னைய வீதிகளில் தேவைக்கேற்ப ஆங்காங்கே பல மதகுகள் காணப்பட்டன. ஆனால் தற்போது அவ்வீதிகள் மீளமைக்கப்படும்போது மதகுகளும் மறைந்து போவதைக்காணமுடியும். அதற்கு மேலாக முன்னர் பிரதான வீதிப் பகுதிகளிலிருந்து வெள்ளம்வடிந்தோடும் [illegible]வாக மணல் ஒழுங்கைகள் வலைப்பின்னலாகக் காணப்பட்டன. ஆனால் அவை படிப்படியாகத் தார் வீதிகளாக மாற்றப்பெற்று வருகின்றன. அவ்வாறு மாற்றும்போது அதனுயரம் பிரதான வீதியிலிருந்து பதிந்து இருக்க வேண்டும் வீதியின் அருகில் வடிகால் அமைக்கவேண்டும் என்ற விடயங்கள் கவனிக்கப்டாமையினாலும் வெள்ளம் ஊருக்குள் தேங்கிவிடுகின்றது. மேலும் தற்போது குடாநாட்டில் காணிகளின் விலைகள் வானுயரப் போவதால் கீழ்த்தட்டு மக்கள் தமது குடியிருப்புக்களை அமைப்பதற்குக் குறைந்த விலையிலான தாழ்நிலப்பகுதிகளை நாடவேண்டியுள்ளது. அவை பெரும்பாலும் நீர்த்தேங்கங்களின் புறப்பகுதிகளாக உள்ளன. வழமையைவிடச் சற்றுக்கூடுதலான மழைவீழ்ச்சி ஏற்படும்போது அக்குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுவது இயல்பானது. இவ்வாறே பல நீரேந்தும் குளங்கள் முற்றாகக் குடியிருப்புகளாக மாறிவிட்டன. அதேவேளை நீரேந்தும் குளங்கள் பல நீண்டகாலம் தூர்வாரப்படாமையினால் அவற்றின் கொள்ளவுகளும் குறைந்துவிட்டன. இவை தொடர்பாகப் பொது மக்களும் விழிப்புணர்வு பெறவேண்டும். தமது செயற்பாடுகளால் மற்றவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை அவர்கள் மனங்கொள்ளவேண்டும்.

இவ்வாறான பிரச்னைகள் எழுமிடத்து அதிகம் உச்சரிக்கப்படும் ஒருவிடயம் சட்டவிரோதக் கட்டிடங்கள் என்பது. உண்மையில் அவை சட்டவிரோதமான கட்டிடங்கள் என்று கூறுவதற்குப்பதிலாக சட்டவிரோதமாகக் கட்ட அனுமதிக்கப்பட்டவை என்று கூறுவதே பொருத்தம். பெரும்பாலான கட்டிடங்கள் சட்ட அனுமதி அளிப்பவர்களின் சட்டரீதியற்ற அனுமதியடனேயே அரங்கேற்றப்படுகின்றன. அதுவும் நகரப்பகுதிகளில் வீதியை மூடியே சில கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளனவென்றால் யாருக்கும் தெரியாமல் செய்திருக்க முடியுமா? அவ்வாறான கட்டிடங்கள் தொடர்பாக உரியவர்களிடம் முறையிட்டும்கூட நடவடிக்கை எடுக்கபாடாது உள்ளது என்றால் அதன் பின்னால் இருக்கும் காரணங்களை விளங்கிக்கொள்வது கடினமன்று. இந்நிலையில்தான் இவ்வாறான கட்டிடங்களை இடியுங்கள் என்று ஆளுநர் கூறியுள்ளார். இது வெறுங்கூற்றா அல்லது உரியவர்களுக்கான பணிப்பா என்பது தெரியவில்லை. ஏனெனில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இதுவரை செய்திகள் இல்லை. எனினும் அவ்வாறானதொரு அறச்சீற்றம் வரவேற்கக்கூடியதே. எனினும் அதைச் செய்வது எவ்வளவு கடினமானது எனபது மிகப்பழுத்த அனுபவம் பெற்ற சிறந்த நிர்வாகியான ஆளுநருக்கு தெரியாததொன்றல்ல. ஊழலை அகற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கும் அரசாங்கத்தின் வடபகுதிக்கான முதன்மை அதிகாரி என்றவகையில் இனிவரும் காலத்திலாவது சட்டவிரோதமாக அனுமதிக்கப்படும் கட்டிடங்கள் எழாமல் தடுக்கவேண்டும். அதற்கு மேலாக குடாநாட்டுக்கான சிறந்த வடிகாலமைப்பு முறை ஒன்றை உருவாக்குவற்கு அவர் முயலவேண்டும். இதுதொடர்பாக பல வல்லுனர்களின் முன்மொழிவுகள் ஏலவே உள்ளன. இது தொடர்பாக மிகச் சிறப்பான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் சிவகுமார் சுப்பிரமணியம் அவர்களின் அறிக்கைகளை கவனித்தில் கொள்ளமுடியும். இதுதொடர்பான ஆலோசனைகளுக்கும் முன்னெடுப்புக்களுக்கும் அவரின் தலைமையில் வல்லுனர்கள் குழு ஒன்றை ஆளுனர் உருவாக்குவது கருமத்தை விரைவாக்க உதவும் என நம்பமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குப் பிடிப்பாரா அண்ணாமலை?


ஜெபலீன் ஜான்

லண்டனில் மூன்று மாத படிப்பை முடித்து விட்டு தமிழகம் திரும்புகிறார் தமிழக மாநில பாஜக தலைவர் க.அண்ணாமலை.

கடந்த 30 ஆண்டுகளாக தனித்து நின்றும், கூட்டணி சேர்ந்தும் தமிழகத்தில் பாஜகவால் பெரிய அளவில் காலூன்ற முடியவில்லை. 2014 மக்களவைத் தேர்தலில் பாஜக கூட்டணி திமுக, அதிமுகவுக்கு மாற்றாக பாஜக உருவாக்கிய வலுவான கூட்டணி 18.8 வீத வாக்குகளைப் பெற்றது. அந்தக் கூட்டணியில் பாஜகவைவிடக் கூடுதல் வாக்கு வங்கி வைத்திருந்த பாமக, தேமுதிக, மதிமுக, கொங்கு மண்டலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த கொமதேக ஆகியவை இடம்பெற்றிருந்தன. ஆனால், இரண்டு தொகுதிகளில் மட்டுமே அந்தக் கூட்டணி வெற்றி பெற முடிந்தது.

2016 பேரவைத் தேர்தலில் தனது கூட்டணிக் கட்சிகளை பாஜகவால் தக்கவைக்க முடியவில்லை. இதனால் பாஜகவின் வாக்கு வங்கி 5.5 வீதம் இலிருந்து 2.7 வீதமாக - சரிந்தது. 2019 மக்களவைத் தேர்தலில் அதிமுக - பாஜக கூட்டணி அமைந்தபோதும் அது படுதோல்வியையே சந்தித்தது. பாஜகவுக்கு 3.7 வீத வாக்குகள்தான் கிடைத்தன. 2021 பேரவைத் தேர்தலில் அதிமுகவிடம் 20 இடங்களைப் பெற்ற பாஜக 4 தொகுதிகளில் வென்றது. எனினும், அதன் வாக்கு வங்கி வெறும் 2.6 வீதம் மட்டுமே.

இந்தச் சூழலில்தான் மாநிலத் தலைவராக கே. அண்ணாமலை நியமிக்கப்பட்டார். பதவிக்கு வந்த ஓராண்டிலேயே நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட பாஜக, 5 வீத வாக்குகளைப் பெற்று கவனம் ஈர்த்தது. 2022-இல் பாஜக தனித்துப் போட்டியிட்டு சென்னையில் ஒரு மாமன்ற உறுப்பினரைப் பெற்றது.



இதற்கிடையே, திமுக எதிர்ப்பு அரசியலை தீவிரமாகக் கையிலெடுத்த அண்ணாமலை, 'என் மண் என் மக்கள்' எனும் நடைப்பயணத்தை மாநிலம் முழுவதும் மேற்கொண்டார். தொடர்ந்து அண்ணா, ஜெயலலிதா ஆகியோரை அண்ணாமலை விமர்சனம் செய்ததால் அதிமுக-பாஜக கூட்டணி முறிந்தது.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையில் கூட்டணியை உருவாக்கி, 23 தொகுதிகளில் தாமரை சின்னத்தை முன்னிறுத்தி போட்டியிட்டபோது, அந்தக் கட்சியின் வாக்கு விகிதம், தமிழக தேர்தல் வரலாற்றிலேயே முதல்முறையாக 11.2 வீத - ஆக உயர்ந்தது. 12 மக்களவைத் தொகுதிகளில் பாஜக கூட்டணி 2-ஆவது இடத்தைப் பிடித்ததுடன், 9 தொகுதிகளில் பாஜக 2ஆவது இடத்துக்கு முன்னேறியது.

குறிப்பாக, சென்னை மண்டலம், கொங்கு மண்டலத்தில் கோவை, பொள்ளாச்சி, நீலகிரி, தென் மாவட்டங்களில் விருதுநகர் தொகுதியைத் தவிர்த்த பிற தொகுதிகளிலும் பாஜக கூட்டணி மிக கணிசமான வாக்குகளைப் பெற்றது. மக்களவைத் தேர்தல் முடிவை பேரவைத் தொகுதி வாரியாகக் கணக்கிட்டால் 81 தொகுதிகளில் பாஜக கூட்டணி 2ஆவது இடத்தைப் பிடித்திருந்தது.

அதிமுகவுடன் கூட்டணி வைத்திருந்தால் குறைந்தது 15 தொகுதிகளில் அந்த அணி வெற்றி பெற்றிருக்கலாம் எனப் பலர் கருத்துத் தெரிவித்தனர். 30 தொகுதிகளில் கூட வென்றிருக்கக் கூடும் என்கிறார்கள் அதிமுகவினரும், அதிமுகவுடன் கூட்டணி வேண்டும் என்று விரும்பும் பாஜகவினரும்.

கணிசமான மக்களவைத் தொகுதிகளில் அதிமுக தலைமையிலான பாஜக கூட்டணி வென்றிருந்தால், ஒரு வேளை இப்போதுள்ள நரேந்திர மோடி அரசு தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளின் தயவில் இருந்திருக்காது என்பது பாஜகவில் ஒரு பிரிவினரின் கருத்து. 40-40 வெற்றியை திமுகவுக்கு அளித்த தன்மூலம், கடந்த மூன்று ஆண்டு திமுக ஆட்சிக்கு மக்கள் அங்கீகாரத்தை பெற்றுத் தந்து விட்டார் அண்ணாமலை என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அண்ணாமலை மேல்படிப்புக்காக லண்டனுக்கு செல்வதாகக் கூறிச் சென்ற பிறகும், அவரது இடத்தில் வேறொருவரை நியமிக்காமல் தற்காலிக ஏற்பாடாக ஒருங்கிணைப்புக் குழுவை நியமித்த மேலிடத்தின் செயல்பாடு, அண்ணாமலைக்கு தலைமை கொடுக்கும் முக்கியத்துவத்தின் வெளிப்பாடாகப் பார்க்கப்பட்டது. தமிழக பாஜக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக

(14ஆம் பக்கம் பார்க்க)




## வியுக்தியார் பதில்கள்

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** நீண்ட காலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் 10 பேரின் விடுதலை குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் பேசவுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் வாக்குறுதியளித்துள்ளாராமே?

**வியுக்தியார்:** அப்படித்தான் அவர் சொல்லியிருக்கிறார். நல்லவிடயம்தான். ஆனால் இந்த விடயங்களை தமிழ் மக்களின் பிரதிநிதியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலமே நேரடியாக ஜனாதிபதியுடன் பேசியிருக்க வேண்டாமா?. இப்போதும் நமது தேவைகளை மற்றவர்கள் மூலமாகவே கேட்டுப்பெறவேண்டும் என்று இவர்கள் நினைப்பதுதான் ஏன் என்று தெரியவில்லை. சம்பந்தன் ஐயா இருக்கும் வரை தமிழர் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வைத் தராவிட்டால் சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்காது என்று சவால்விட்டுக்கொண்டிருந்தார். சர்வதேசம் இன்றுவரை பார்த்துக்கொண்டு தானே இருக்கின்றது. முதலில் எதற்கெடுத்தாலும் இந்த சர்வதேசத்தை நாடிச் செல்வதை நம்மபவர்கள் நிறுத்த வேண்டும்.

---

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** கடந்த அரசாங்கத்தின் கடைசி ஒருவருடத்தில் வழங்கப்பட்டுள்ள மதுபானச்சாலைகளின் விபரங்கள் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டனவே பார்த்தீர்களா? மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு செய்த அரசியல்வாதிகளின் பட்டியல் விசாரணைகளின் பின்னர் வெளியிடப்படும் என அரசாங்கம் தற்போது உறுதியளித்துள்ளது. மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் நிதியமைச்சு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு பரிந்துரைத்த அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியல் அனைத்து மக்களுக்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதே. இந்த விபரங்களை பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் அல்லவா வெளியிட்டிருக்க வேண்டும்?

**வியுக்தியார்:** இனி என்ன மதுபானச்சாலைகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இனி அவற்றுக்கு யார் யார் சிபார்சு செய்தார்கள் என்ற விபரங்களை வெளியிடுவதால் என்ன நடந்துவிடப்போகின்றது?. சிபார்சு செய்த பலர் இப்போது அரசியலிலேயே செல்லாக்காசாக போய்விட்டார்கள். சிலர் தேர்தலில் வெற்றி பெற்று எம்.பி. ஆகிவிட்டார்கள். செல்லாக்காசாகிப் போனவர்களுக்கு அதனால் எந்தப் பிரச்சனையும் வந்துவிடப்போவதில்லை. வெற்றிபெற்றவர்களும் இனி ஐந்து வருடங்களுக்கு பிறகுதானே அடுத்த தேர்தலை சந்திக்கப்போகிறார்கள். அப்போது நமது மக்களும் இவற்றையெல்லாம் மறந்தே விடுவார்களே. ஆனால் இந்த வியுக்தியார் காத்திருப்பதெல்லாம், வடக்கில் சிபார்சு செய்தவர்களில் எவர் தனது பெயர் வெளியே வராதவாறு புத்திசாலித்தனத்துடன் சிபார்சு செய்திருக்கிறார் என்பதை அறிவதற்காகவே.

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** 2024 ஜனவரி முதல் ஏப்ரல் வரை ஜனாதிபதியின் செலவுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரணில் ஒதுக்கிய அதே தொகையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் 2025 ஜனவரி முதல் ஏப்ரல் வரை ஒதுக்கியுள்ளதாக கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரி வித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** இப்ப என்ன சொல்ல வருகிறார் அவர்?. அவரது முன்னாள் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தான் ஜனாதிபதியாக இருந்தபோது தனது செலவுக்காக அதிக நிதியை செலவிடவில்லை என்கிறாரா? அல்லது அவரைப்போலவே இவரும் அதிகம் செலவிடுகின்றார் என்கிறாரா? அல்லது அரச செலவினத்தைக் குறைப்பேன் என்று சொல்லிக்கொண்டு பதவிக்கு வந்த அனுர, அப்படி இல்லாமல் அதிகம் செலவிடுகிறார் என்கிறாரா என்பது தெரியவில்லையே. என்ன இருந்தாலும், பதவிக்கு வந்த புதியவர் சில மாதங்கள் என்றாலும் செலவிட்டுப் பார்த்தால்தானே எது தேவையில்லாதது, எது தேவையானது என்பது தெரியவரும். எதிர்க்கட்சி என்றால் இப்படித்தான் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டும் என்று நினைக்கின்றார்கள் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கின்றது.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** 'பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டியதொரு சட்டமாகும். என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றை அமைத்துக்கொள்வதே எமது திட்டம். அதனால் இந்த சட்டத்தை ஏற்படுத்தி அனுமதித்துக்கொள்ளும்வரை நாட்டில் இனவாதம், மதவாதம் தலைதூக்கும்போது அதனை அடக்குவதற்கு தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படுகிறது" என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** இதைத்தானே இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்களும் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படிச் சொன்னபோதெல்லாம், அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாகப் பயன்படுத்துகின்றது என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள்தான் இன்றைய ஆட்சியாளர்கள். காரணம், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களும்தான். எதிர்க்கட்சியில் இருக்கும் போது ஒன்றை எதிர்ப்பதும், ஆளும்கட்சிக்கு வரும்போது அதனையே செய்வதும் 'அரசியலில் சகஜமப்பா" என்று கவுண்டமணி பாணியில்தான் இதற்கு பதில் சொல்லவேண்டியிருக்கின்றது.

---

**செல்வா. கேசவன்**
**சாங்கிலியன் வீதி, நல்லூர்.**

கேள்வி: புதிய அரசியலமைப்பியில் சிறந்த தீர்வு நடை முறைப்படுத்தப்படும் வரை 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படாது என்றும் அது தொடர்பில் சகல தரப்பினருடனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்றே தான் கூறினேன் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இப்போது தெரிவித்துள்ளாரே.

வியுக்தியார்: மாகாணசபை முறை நீக்கப்படும் என்று அவர் கூறியபின்னர் பல்வேறு தரப்பினரும் அதுகுறித்து கண்டனம் தெரிவித்துக்கொண்டிருந்தபோது தனது தவறை திருத்த வேண்டும் என்று நினைக்காத அவர், பல நாட்களின் பின்னர் ஏன் இப்படி மறுப்பு அறிக்கை வெளியிட்டார் என்பது தெரியவில்லை. நாட்டில் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுவிட்டதாகவே நாம் எல்லோரும் இன்றுவரை நம்பிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால் எல்லாம் பழைய பாதையில்தான் சென்றுகொண்டிருப்பதாகவே தெரிகின்றது. நான் சொல்வது பழைய அரசியல் பாதையை.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** யுத்தத்தின்போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் தங்கள் உயிர்களை இழந்த தமிழர்களையும் நினைவு கூருவதும் ஜே.வி.பியின் நினைவு கூரல்களும் ஒரே மாதிரியானவை. வித்தியாசங்கள் இருக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் தெரிவித் திருந்தாரே. இது சரியானதா?.

**வியுக்தியார்:** அவர்கள் ஆயுதத்தின் மூலம் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றி தாங்கள் விரும்பும் ஆட்சியை நிறுவுவதற்காக போராடியவர்கள். இவர்கள் அந்நியர் ஆட்சியில் வீழ்ந்துபோன தங்கள் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த போராடியவர்கள். இதைத்தான் ஈழநாடு ஒருதடவை ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்திய போது, சில சாமியார்கள் 'கலைவந்து' ஆடினார்களே கவனிக்கவில்லையா. இப்போது நாம் சொன்னதைத் தான் கஜேந்திரகுமார் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பிரான்ஸ் வரலாற்றில் முதல்முறையாக நம்பிக்கையில்லா தீர்மானத்தால் ஆட்சி கவிழ்ந்தது!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

1962-ம் ஆண்டுக்குப் பிறகு நம்பிக்கையில்லா தீர்மானம் மூலமாக பிரான்ஸ் அரசு கவிழ்க்கப்படுவது இதுவே முதல் முறை. தற்போது பிரான்ஸில் நிலவி வரும் அரசியல் கொந்தளிப்பு, ஐரோப்பிய யூனியனையே அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இரு நாட்களுக்கு முன்பாக பிரான்ஸ் பிரதமர் மிஷேல் பார்னியேர் (Michel Barnier) தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்ததால் ஆட்சி கவிழ்ந்தது.

பிரான்ஸில் கடந்த செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அதிபர் இமானுவேல் மக்ரோன், நாடாளுமன்றத்துக்கு முன் கூட்டியே தேர்தலை நடத்தினார். இந்தத் தேர்தலில், அதிபரின் மையவாத கூட்டணி, இடதுசாரிகள் கூட்டணி, அதி தீவிர வலதுசாரிகள் கூட்டணி ஆகியவை போட்டியிட்டன.

இதில் அதிதீவிர வலதுசாரிகளின் தேசிய பேரணி கட்சி அதிக அடங்களில் வெற்றி பெற்றபோதிலும் எந்தக் கட்சியாலும் ஆட்சி அமைக்க முடியவில்லை. இந்நிலையில் அதிபர் க்ரோன் தனது கட்சியைச் சேர்ந்த பார்னியேரை பிரதமராக அறிவித்தார். பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் மிஷேல் பார்னியர் பிரதமரானார்.

**மிஷேல் பார்னியர் ஆட்சி**

பிரான்ஸ் நாடாளுமன்றத்தில், 2025 ஆம் ஆண்டுக்கான சமூகப் பாதுகாப்பு பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. ஆனால், அதிபர் இமானுவேல் மக்ரோனின் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி பட்ஜெட்டை நிறைவேற்றுவேன் என்று பிரதமர் பார்னியர் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பிரதமர் பார்னியரின் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தன. இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் மிஷேல் பார்னியர் தோல்வியடைந்ததால், ஆட்சியை பறிகொடுத்தார்.

இந்த தோல்வியைத் தொடர்ந்து தமது பிரதமர் பதவியை மிஷேல் பார்னியேர் ராஜினாமா செய்தார். இதனைத் தொடர்ந்து, அதிபர் இமானுவேல் மக்ரோனையும் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

**தீவிர வலதுசாரி ஆட்சி தோல்வி**

577 உறுப்பினர்களைக் கொண்ட அவையில் பெரும்பான்மையான 331 எம்.பி.க்கள், பிரதமர் பாரினியரின் அரசாங்கத்தை வெளியேற்ற வாக்களித்தனர். 1962இல் சார்லஸ் டிகோல் அதிபராக இருந்தபோது ஜார்ஜஸ் பாம்பிடோவின் அரசாங்கம் தோல்வியடைந்ததற்கு பிறகு தற்போது பார்னியேரின் ஆட்சி கவிழ்ந்துள்ளது.

இதேவேளை பிரான்ஸ் அரசு எந்த நேரத்திலும் கவிழ்வதை அனுமதிக்க முடியாது எனவும் அதிபர் வலியுறுத்தியுள்ளார். அதேநேரத்தில் அடுத்த பிரதமர் யார், அவரை எவ்வளவு விரைவில் அதிபர் நியமிப்பார் என்பது குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.

தற்போது புதிய பிரதமர் தெரிவில் பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னு மற்றும் அதிபரின் கூட்டாளியான ஃபிராங்கோயிஸ் பெய்ரு ஆகியோர் உள்ளனர். அதேநேரத்தில் பிரான்ஸ் அரசியலில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் உலக நாடுகளை பாரியளவில் அதிர்ச்சிக்குள்ளாக்கின.

**மூன்று மாத பிரதமராக**

பார்னியர் 91 நாட்கள் மட்டுமே பிரதமராக இருந்துள்ளார். அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் இவ்வளவு குறுகிய காலத்தில் பிரதமர் பதவியை இழந்தவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸில் ஏற்பட்டுள்ள இந்த அதிரடிச் சூழல், அந்நாட்டை பெரியதொரு அரசியல் மற்றும் பொருளாதார கொந்தளிப்புக்குள் நாட்டை தள்ளியிருக்கிறது. இது பிரான்ஸ் மக்களையும் தாண்டி ஐரோப்பிய ஒன்றியத்தையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

தற்போது பிரான்சின் அரசியல் சூழலை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. பிரான்ஸின் அரசியல் கொந்தளிப்பு, அவர்களின் உள்நாட்டுப் பிரச்சினை. இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதன் காரணம், ஐரோப்பிய ஒன்றியத்தின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட நாடு தான் பிரான்ஸ்.

முதலாவது இடத்தில் ஜெர்மனி உள்ளது. ஜெர்மனியும் பிரான்ஸும் பாரம்பரியமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்தியல் மற்றும் அரசியல் திறன்களின் முன்னோடிகள் என்றே பார்க்கப்படுகின்றன.

**ஐரோப்பிய ஒன்றிய சிதைவு?**

தற்போதையை சூழலில், ரஷ்யாவுக்கு எதிராக தங்களை நிலைநிறுத்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றுமை மற்றும் வலிமையின் நிலைப்பாடு இந்த ஆட்சியின் வீழ்ச்சியின் பின்னர் என்னவாக இருக்கப்போகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது.

உள்நாட்டு அரசியல் கொந்தளிப்புகளால் திசைத் திருப்பப்பட்டிருப்பது பிரான்ஸ் மட்டும் இல்லை என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது. பிரான்ஸில் ஏற்பட்டுள்ள இந்த அதிரடிச் சூழல், அந்நாட்டை பெரியதொரு அரசியல் மற்றும் பொருளாதார கொந்தளிப்புக்குள் தள்ளியிருக்கிறது.

ஜெர்மனியிலும் சமீபத்தில் அதன் கூட்டணி அரசு கவிழ்க்கப்பட்டு, 2025 பிப்ரவரியில் அந்நாடு தேர்தலைச் சந்திக்க இருக்கிறது. இதனால் ஐரோப்பிய ஒன்றிய ஒற்றுமை தற்போது சிதைவைச் சந்தித்துக் கொண்டிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். இதனால்தான் ஐரோப்பிய ஒன்றியம் பெரும் கலக்கத்தில் உள்ளது

இது பிரான்ஸ் மக்களையும் தாண்டி ஐரோப்பிய ஒன்றியத்தையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. பிரான்சின் அரசியல் சூழலை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது.

**அதிபர் மக்ரோன் பதவி விலகுவாரா?**

பிரான்ஸின் அரசியல் சட்டப்படி இன்னும் ஒரு வருட காலத்துக்கு பிரதமர் தேர்தலை நடத்த முடியாது. அதுவரை பார்னியர் இடைக்கால பிரதமராக இருக்கலாம். அல்லது அதிபர் மக்ரோன் புதியவர் ஒருவரைப் பிரதமராக நியமிக்கலாம். என்றாலும், அந்நாட்டு நாடாளுமன்றம் தற்போது மூன்று பரஸ்பர எதிர் அரசியல் தொகுதிகளாக பிளவுப்பட்டிருக்கும் நிலையில், பிரான்ஸில் மேற்கொள்ளப்பட இருக்கும் சீர்திருத்தங்களும், புதிய பட்ஜெட்டுகளும் முடக்கக்கூடும் என்பதே யதார்த்தம்.

இதனிடையே, வரும் 2027-ம் ஆண்டு பிரான்ஸ் அதிபரின் பதவிக் காலம் முடிவடையும் நிலையில், முன்கூட்டியே அதிபர் தேர்தலை மக்ரொன் நடத்தலாம் என்றும் கூறப்பட்டு வருகிறது.


அதேவேளை அதிபர் மகரோனும் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை இப்போது எதிர்க்கட்சிகளிடம் வலுத்து வருகின்றன. இது பிரான்ஸின் அரசியல் முட்டுக்கட்டையை முடிவுக்கு கொண்டு வரும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஒருவேளை அதிபர் மக்ரொனும் ராஜினாமா செய்தால், அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக அடுத்து பிரான்ஸில் என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு, அந்நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் அதிகரித்துள்ளது.






> பிரான்ஸ் வரலாற்றில் முதல்முறையாக அரசின் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றிபெற்று ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களில் பிரதமர் மிஷேல் ஆட்சி கவிழ்ந்த பின்னர் பிரான்சின் அரசியல் சூழலை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 சிங்கக்குட்டிகளை ஈன்ற லாரா மற்றும் டோரா!

கொழும்பு, டிசெ. 08


அம்பாந்தோட்டை ரிதியகம சபாரி பூங்காவில் புதிதாக 6 சிங்கக்குட்டிகள் இணைந்துள்ளன.

இந்த சபாரி பூங்காவில் இரண்டு சிங்கங்கள் தலா மூன்று குட்டிகளை ஈன்றுள்ளன.

லாரா மற்றும் அதன் குட்டியான டோரா ஆகிய சிங்கங்களே இவ்வாறு 6 குட்டிகளை ஈன்றுள்ளன. மேலும் குட்டிகள் பிறந்து ஒரு மாதம் ஆவதாக பூங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்.

டோரா சில வருடங்களுக்கு முன்பு லாரா என்ற குட்டியை ஈன்றது.

இருப்பினும், லாரா சிங்கம் டோராவுக்குப் பாலூட்ட மறுத்த நிலையில், பூங்கா ஊழியர்கள் டோராவுக்கு செயற்கையாகப் பாலூட்டி அதனை பராமரித்து வந்தனர்.



ஆனால் டோரா, லாராவைப் போல தனது குட்டிகளுக்கு பால் கொடுக்க மறுக்காமல் குட்டிகளை பாதுகாக்கின்றமை சிறப்பம்சமாகும்.

தற்போது, இந்த 6 சிங்கக் குட்டிகளும் சபாரி பூங்காவில் மிகவும் ஆரோக்கியமாக வாழ்ந்து வருவதாகவும், அடுத்த சில வாரங்களில் அவை பொதுக் கண்காட்சிக்காக தனிப் பகுதியில் வெளியிடப்படும் என்றும் சபாரி பூங்கா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ)

# கதிர்காமத்தில் சிதறு தேங்காய் உடைப்பு சடுதியாக குறைந்தது

கதிர்காமம், டிசெ. 08

தேங்காய் விலை உயர்வடைந்ததையடுத்து கதிர்காமம் ஆலய முற்றத்தில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடுவது சுமார் 80 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

தேங்காய் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பால் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் இனிப்பு வகைகளை உற்பத்தி செய்யும் வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கதிர்காம யாத்திரிகர்கள் ஆலயம் முன்பு சிதறு தேங்காய் உடைத்து வழிபடுவது வழக்கமாகவுள்ள நிலையில் தேங்காய் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக தேங்காய் உடைத்து வழிபடுவது 80 சதவீதம் குறைந்துள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(எ)

# தாக்குப்பிடிப்பாரா....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

எச்.ராஜா நியமிக்கப்பட்ட நிலையில், தமிழக பாஜக மூத்த நிர்வாகிகள் மீண்டும் திமுக எதிர்ப்பைத் தீவிரப்படுத்தி, அதிமுக எதிர்ப்பை மட்டுப்படுத்த தொடங்கினர். ஆனால், அதிமுக தரப்பு பாஜக கூட்டணிக்கு சிறிதுகூட இணக்கம் தெரிவிக்கவில்லை.

அண்ணாமலையின் செயல்பாடுகளும் தனித்துப் போட்டியிட்டு அதிமுகவின் தோல்விக்கு பாஜக காரணமானதும் பாஜக-அதிமுக இடையே கடுமையான பிளவை ஏற்படுத்திவிட்டது. வெளிப்படையாக பாஜக எதிர்ப்பு நிலைப்பாட்டை அதிமுக எடுத்திருக்கும் நிலையில், மீண்டும் இணக்கம் ஏற்படுமா என்பது கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

வட சென்னையில் வெள்ளம் வந்த நேரத்தில்கூட பாஜகவால் தீவிரமாகக் களத்தில் இறங்கிப் பணியாற்ற முடியவில்லை. அதேபோல, தமிழக பாஜகவுக்கு கட்சி மேலிடம் கொடுத்த முக்கியப் பொறுப்பான உறுப்பினர் சேர்க்கையிலும் இலக்கை எட்ட முடியவில்லை.

இதற்கிடையே, நடிகர் விஜயின் அரசியல் பிரவேசம், பேரவைத் தேர்தலை மையமாக வைத்து திமுக, அதிமுக, நாதக தீவிரமாக செயல்பட்டு வருவது உள்ளிட்ட செயல்பாடுகளால் தமிழக அரசியல் களம் விறுவிறுப்பாகியுள்ளது.

விஜயை திமுக எதிர்ப்பு சக்தி என வரவேற்க வேண்டுமா அல்லது பாஜகவின் போட்டி சக்தி என விமர்சிக்க வேண்டுமா என்பதில் பாஜகவில் குழப்பம் நீடிக்கிறது. பாஜகவை விஜய் கடுமையாக விமர்சனம் செய்த பின்னரும் இதுவரை பாஜகவிடம் இருந்து சரியான எதிர்வினை வரவில்லை.

தமிழக பாஜக மூத்த நிர்வாகிகளைப் பொறுத்தவரை திமுகவுக்கு எதிராக பெரிய கூட்டணியைக் கட்டமைத்தால் மட்டுமே அதை வீழ்த்த முடியும் எனக் கருதுகின்றனர். ஆனால், அதற்கு அதிமுகவும் தயாராக இல்லை அதை அண்ணாமலையும் விரும்பவில்லை.

இந்நிலையில்தான், அண்ணாமலை தமிழகத்துக்கு திரும்பியிருக்கிறார். மக்களவைத் தேர்தல் என்பதால் பிரதமர் மோடியை முன்னிறுத்தி பாஜகவால் கணிசமான வாக்கு வங்கியைப் பெற முடிந்தது.

நாதக, தவெக போன்ற கட்சிகள் இளைஞர்களைக் குறிவைத்துக் களமாடி வரும் நிலையில், இளைஞரான அண்ணாமலையைத் தவிர்த்துவிட்டு பாஜக இயங்க முடியுமா என்பதும் கேள்விக்குறிதான். அடுத்து வருவது பேரவைத் தேர்தல் என்பதால் அதிமுகவை தவிர்த்துவிட்டு பாஜகவால் தனி அணியாகச் செயல்பட முடியுமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# யூடியூப் அமர்க்களங்கள்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் உண்மைத்தன்மை கேள்விக்குறியாகி நிற்கிறது.

யூ டியூப்பில் நேரலை என்ற ஒரு வசதி இருக்கிறது. அதில் மக்கள் ஆர்வமாக ஒன்று கூடி கண்டுகளிக்கிறார்கள். புடவை விற்பனை, பொருட்கள் விற்பனை என களை கட்டும் அந்தப் பக்கத்தை எட்டிப் பார்த்தால், சில நேரங்களில் முகம் சுளிக்கவும் நேரிடுகிறது. தனிப்பட்ட நபரின் மீது தாக்குதல் நிகழ்த்தும் வகையில் தரம் தாழ்ந்து விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். குறிப்பாக நேரலைகளில் இது போன்ற அத்துமீறல்கள் அதிகம். அதே நேரத்தில் பார்வையாளர்களைக் கலவரப்படுத்தக் கூடிய காணொளிகளை பல யூ டியூபர்கள் தொடர்ந்து பதிவிட்டு வருவதும் கவலையளிக்கிறது.

அதிகமான பார்வைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக தனிநபரின் அந்தரங்கத்தைப் பொதுவெளியில் பேசுவது, சம்பந்தப்பட்டவரிடம் பணம் பெற்றுக் கொண்டு தரமற்ற ஒன்றைப் பற்றி 'ஆகா ஓகோ' எனப் புகழ்வது, புதிய செய்திகளை முந்தித் தர வேண்டும் என்ற முனைப்பில் சரிவர ஆராயாது, தப்பும் தவறுமாக தகவல் உரைப்பது என இதன் மற்றொரு பக்கம் இருக்கிறது.

ஆக, இன்று இணையத்தில் கொட்டிக்கிடக்கும் பல்லாயிரக்கணக்கான தகவல்களும் காணொளிகளும் நம் வேலையைப் பன்மடங்காகக் குறைத்தாலும், அது உண்மைக்கு மிக நெருக்கமாகக் கூட இருக்குமா என்றால் கேள்விக் குறியாகத் தான் இருக்கிறது. இது யூ டியூபிற்கும் பொருந்தும்.

# இனவாதத்தை தோற்கடிக்கும் உறுதிப்பாட்டை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளான ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழேயே இருந்துவருகின்றன. அடுத்தவருட இறுதியில் மாகாணசபை தேர்தல்களை நடத்தப் போவதாக கடந்த வாரம் தன்னைச் சந்தித்த இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுவிடம் ஜனாதிபதி திசாநாயக்க கூறியதாக செய்திகள் வெளியாகின .

ஆனால், 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதாக தெரியவரவில்லை. சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வை வலியுறுத்திய அவர்களிடம் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் தொடங்கும்போது அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று ஜனாதிபதி மேலோட்டமாக கூறியிருக்கிறார்.

ஆனால், புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு மூன்று வருடங்கள் எடுக்கும் என்றும் அப்போது மாகாண சபைகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் உட்பட முக்கியமான விவகாரங்கள் குறித்து பொதுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு போதுமான வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சரவை பேச்சாளரான டாக்டர் நாளிந்த ஜயதிஸ்ஸ கடந்த வாரம் செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார். மாகாண சபைகள் தொடர்பில் உறுதியான தீர்மானம் எதையும் தாங்கள் எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று வருடங்கள் என்பது அரசியலைப் பொறுத்தவரை ஒரு நீண்டகாலமாகும். அந்த இடைப்பட்ட காலத்திற்குள் அரசியல் நிலைவரங்களில் மாற்றங்கள் கூட ஏற்பட்டு விடலாம். இலங்கையில் புதிய அரசியலமைப்பை கொண்டு வந்த எந்த அரசாங்கமும் இவ்வளவு நீண்டகாலம் தாமதித்ததில்லை.

முதலாவது குடியரசு அரசியலமைப்பை 1972 மே மாதம் கொண்டுவந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1971 ஜே.வி.பி. கிளர்ச்சி இல்லாவிட்டால் முன்கூட்டியே அந்த அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியிருக்கும். ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு வருடத்துக்கும் சற்று அதிகமான காலத்திற்குள் இரண்டாவது அரசியலமைப்பை கொண்டுவந்தது.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான "நல்லாட்சி" அரசாங்கம் முன்னெடுத்த அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை நான்கு வருடங்கள் (2015 - 19) நீடித்து இடைக்கால அறிக்கையுடன் முடிவுக்கு வந்தது. அந்த செயன்முறையை நிறைவு செய்து பிரச்னைகளுக்கு தீர்வு காணப் போவதாக ஜனாதிபதி திசாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளித்தார். தனது போட்டி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் தங்களது விஞ்ஞாபனங்களில் உறுதியளித்ததை போலன்றி திசாநாயக்க 13 வது திருத்தத்தை பற்றி குறிப்பிடுவதை திட்டமிட்டே தவிர்த்துக் கொண்டார்.

புதிய அரசியலமைப்பை கொண்டு வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திட்டத்தை பொறுத்தவரை, ஒரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய திசாநாயக்கவும் அந்த பதவியில் மூன்று வருடங்கள் நீடிக்கப் போகிறார் என்பதாகும்.

புதிய அரசியலமைப்பில் புதிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்போவதாக கூறும் அரசாங்கம் அந்த இடைப்பட்ட மூன்று வருட காலத்திற்குள் தற்போதுள்ள அதிகாரங்களுடனாவது மாகாணசபைகளை இயங்கவைக்குமா? அடுத்த வருட இறுதியில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று தமிழரசு கட்சி பாராளுமன்ற குழுவிடம் ஜனாதிபதி கூறியிருக்கிறார். உண்மையிலேயே உள்ளூராட்சி தேர்தல்களையும் விட முன்கூட்டியே நடத்தப்பட வேண்டியவை மாகாணசபை தேர்தல்களே. ஆறு வருடங்களாக அவற்றுக்கு தேர்தல் நடத்தப்படவில்லை.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரமே சாத்தியமானளவு விரைவாக உள்ளூராட்சி தேர்தல்களை அடுத்த வருடம் ஜனவரியில் அல்லது பெப்ரவரியில் நடத்த வேண்டிய கட்டாயம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டிருக்கிறது. மாகாணசபை தேர்தல்கள் தாமதிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்க் கட்சிகள் கூட நீதிமன்றத்தை நாடுவதில் அக்கறை காட்டவில்லை.

உள்ளூராட்சி தேர்தல்கள் முடிவடைந்த பிறகு அடுத்த வருட இறுதிவரை காத்திருக்காமல் அரசாங்கம் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் . அரசியலமைப்பில் புதிய தீர்வுத்திட்டத்தை கொண்டுவருவதற்கு முன்னதாக தற்போது கைவசம் இருக்கும் மாகாண சபைகளை முழுமையான அதிகாரங்களுடன் இயங்க வைப்பதே முக்கியமானதாகும். ஏனென்றால் 13 வது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களையே 37 வருடங்களாக முழுமையாக நடைமுறைப்படுத்தமுடியாமல் இருக்கும் நிலையில் அதில் உள்ளதையும் விட கூடுதலான அதிகாரங்கள் கொண்ட ஏற்பாட்டை எவ்வாறு புதிய அரசியலமைப்பில் எதிர்பார்க்கமுடியும்?

13 வது திருத்தத்தில் இருக்கின்ற அதிகாரங்களாவது முழுமையாக புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்படுமா என்று கிளம்புகின்ற சந்தேகத்தில் நியாயம் இல்லாமல் இல்லை. அடுத்த வாரம் ஜனாதிபதி திசாநாயக்க புதுடில்லியில் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் 13 வது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் விவகாரத்தை இந்திய தலைவர்கள் அவரின் கவனத்துக்கு கொண்டு வருவார்கள். முன்னைய ஜனாதிபதிகளைப் போன்று புதுடில்லியில் ஒன்றையும் கொழும்பில் வேறு ஒன்றையும் கூறாமல் திசாநாயக்க வித்தியாசமாக நடந்துகொள்வார் என்று நம்புவோமாக.

சிறுபான்மைச் சமூகங்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கும் அதிகாரப்பரவலாக்கலுக்கும் எதிராக தென்னிலங்கை அரசியல் சமுதாயத்திடமும் மக்களிடமும் இருக்கின்ற ஆழமான வெறுப்புணர்வை அகற்றுவதற்கு தனக்கும் அரசாங்கத்துக்கும் தற்போது இருக்கும் பேராதரவை பயன்படுத்தி ஜனாதிபதி திசாநாயக்க துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்காமல் இனவாதத்துக்கு எதிராக பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. முதலில் தேசிய மக்கள் சக்தி தன்னிடம் இருக்கும் மனத்தடையை முழுமையாக அகற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவானது..

விரிகுடாவில் இருந்து இலங்கை -தமிழ்நாடு கடற்கரையை அடையும் எனவும் இதனால் தற்காலிகமாக மணிக்கு 60 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதுடன் பலத்த மழை எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## புலிகள்..

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலிகள் அமைப்பின் கொடி மற்றும் அடையாளங்களுடன் நினைவேந்தல் நடத்த முடியாது.

சட்டத்தில் அதற்கு இடமில்லை.

அவ்வாறு நடந்திருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இனவாதத்துக்கும், தீவிரவாதத்துக்கும் இடமில்லை - என்றார். (அ)

## மனித...

இந்த சந்திப்பு தொடர்பில் தமது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் இணையவழி பாதுகாப்பு சட்டம் உள்ளிட்டவை தொடர்பில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தங்களது கவலையை வெளிப்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் ஊழலுக்கு எதிராக அதிக பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கை மக்களின் குரல்களைப் பிரதிபலிக்கும் செயற்பாடுகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பழிவாங்கலை...

தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் திட்டமொன்று இருந்தது. தூரநோக்கொன்று இருந்தது. நாம் எவரையும் பழிவாங்கலுக்கு உட்படுத்தவில்லை.

எதிர்கட்சியினரை அச்சுறுத்துவதற்கோ, ஏனையவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்காகவோ மகிந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரவில்லை. மாறாக நாட்டிற்காக வேலை செய்யும் நோக்கிலேயே நாம் ஆட்சிக்கு வந்தோம்.

ஆனால் நல்லாட்சி அரசாங்கம் பழிவாங்கலை மேற்கொள்ளும் நோக்கிலேயே ஆட்சிக்கு வந்தது. எம்மீது ஊழல் வழங்குகளை தொடுத்து சிறையில் அடைத்து பழிவாங்கலை மேற்கொண்டது.

அதேபோன்று மக்களுக்டகான சேவையை மேற்கொள்வதற்காகவே கோட்டாபவின் அரசாங்கமும் ஆட்சிக்கு வந்தது. அதேபோன்று நாமும் வேலை செய்தோம். நாம் எந்த வேலையையும் செய்யவில்லை என எவராலும் சொல்ல முடியாது.

இருப்பினும் எம்முடைய கட்சி திட்டமிடப்பட்ட ரீதியில் வீழ்த்தப்பட்டது. அதனை தொடர்ந்து கொவிட் தொற்று நெருக்கடி நிலையுடன் வீழ்ச்சியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோன்று அரசியல் ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறாக எம்முடைய அரசாங்கத்தை வீழ்த்தினர்.

இத்தகைய பின்னணியில் தற்போதைய அராசாங்கம் பழிவாங்கலை மேற்கொள்வதற்காகவே ஆட்சிக்கு வந்துள்ளது. மாறாக வேலைசெய்வதற்காக இல்லை என்றே கூற முடியும்.- என்றார். (அ)

## ஐ.தே.க...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நானும் உள்ளேன். இந்த இணைவு என்பது அரசியல் பிரசாரமாக இருக்ககூடாது. உண்மையான இணைவாக இருக்க வேண்டும்.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை பொறுப்பேற்குமாறு சஜித்துக்கு, ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறு அல்லாமல் வெறுமனே பேசிக்கொண்டிருப்பதால் நடக்கப் போவது எதுவும் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் உண்மையான இணைவுக்காக குரல்கொடுக்க வேண்டும். மாறாக தோல்வியை மறைப்பதற்காக இணைவு பற்றி பேசி பயன் இல்லை - என்றார். (அ)

## விந்தன்...

விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் உள்வீட்டு தகவல்களை வெளிப்படுத்தியதாக தெரிவித்து விந்தன் கனகரத்தினம் மீது உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து அவரைக் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி அவரிடம் இருந்து விளக்கம் கோருவதாக தலைமைக் குழு தீர்மானித்துள்ளது. இதேவேளை அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளயிட்டிருந்தனர். குறித்த தீர்மானத்தையடுத்து விந்தன் கனகரத்தினம் கூட்டத் தில் இடைநடுவில் வெளியேறிச் சென்றிருந்தார்.

இதேவேளை, கட்சியின் தீர்மானத்தை மீறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு அளித்தமைக்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்திடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பவுள்ளதாகவும் தலைமைக் குழு தீர்மானித்துள்ளது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளரை பெயரிடும் விடயம் தொடர்பாக சுரேன் குருசாமி, குகதாஸ் ஆகியோரிடமும் விளக்கம் கோரி கடிதம் அனுப்பவுள்ளதாக தலைமைக் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## உள்ளூராட்சி..

ரத்நாயக்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை கோருவதற்கான வரைவுச் சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு அண்மையில் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டது.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமைக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தேர்தலை விரைவில் நடத்துமாறு ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டது.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்புக்கு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வேட்புமனுக்கள் கோரப்பட்டு, 80,670 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் பலர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் வெளிநாடுகளிலும் உள்ளனர். சுமார் 2000 பேர் வேறு கட்சிகளுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல்.ரத்நாயக்க மேலும் கூறினார். (அ)

## 225 ரூபாவுக்கு...

ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அடுத்த பத்து நாட்களுக்குள் அவதானமாகச் செயற்படுமாறும், இதற்கு முரணாக செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அத்துடன் நாட்டில் நெடுஞ்சாலைத் துறைக்காகவே அதிகளவில் முதலீடு செய்யப்படுவதாகவும்,அடுத்து நீர்ப்பாசனத் துறைக்கும் விவசாயத் துறைகுமே அதிக முதலீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, விவசாயிகளுக்கே அதிக நிவாரணங்கள் வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

நெல் கொள்வனவிற்காக வியாபாரிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுவதாகவும் அதனால் மக்களின் அரிசியை நுகரும் உரிமையில் கைவைக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதன்படி அரிசி விலைகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நாடு அரிசி ஒரு கிலோ மொத்த விலை 225 ரூபா. சில்லறை விலை 230 ரூபா

வெள்ளை அரிசி மொத்த விலை 215 ரூபாய். சில்லறை விலை 220 ரூபா

இறக்குமதி செய்யப்படும் நாடு அரிசி கிலோ 220 ரூபா

சம்பா அரிசி மொத்த விலை 235 ரூபா. சில்லறை விலை 240 ரூபா

கீரி சம்பா அரிசி மொத்த விலை 255 ரூபா. சில்லறை விலை 260 ரூபாவாகும்.

அதேபோல் நாளாந்தம் அரிசி ஆலைகளிலிருந்து வெளிவரும் அரிசியின் அளவினைக் கணக்கிடுமாறும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்தார்.

அதே போன்று அரிசி தொடர்பான பிரச்னைகளை அரசாங்கத்துடன் சுமூகமாக தீர்த்துக் கொள்ளுமாறும் அரிசி வர்த்தகர்களிடம் ஜனாதிபதி கோரினார். (அ)

## நடைபெறாத...

இதனால் உள்ளூராட்சி சபை தேர்தலில் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்கள் இரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக புதிய வேட்புமனுக்கள் கோரப்படவுள்ளன.

பழைய வேட்புமனுக்களின் படி கணிசமான அளவு பணிகள் நடைபெற்றுள்ளதாகவும், அதற்காக அச்சிடப்பட்ட அதிகாரபூர்வ வாக்குச் சீட்டு அறிவிப்புக்கள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் எதனையும் மறு வேட்புமனு அழைப்பில் பயன்படுத்த முடியாது என்றும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான மறு வேட்புமனு அழைப்பில் இதுவரையான செலவீனங்களை திருப்பிக் கொடுக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் மேலும் கூறினார்.

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு வரை கணிசமான அளவு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், வேட்புமனுக்கள் திரும்பப் பெறப்படும் பட்சத்தில் அனைத்துப் பணிகளும் புதிதாக தொடங்கப்படும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

உளளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுவை கோருவதற்கு அமைச்சரவை அண்மையில் தீர்மானித்ததாகவும், ஆனால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நடைமுறையில் உள்ளதால் தேர்தல்கள் ஆணைக்குழுவால் இதுவரை பின்பற்றப்பட்ட செயற்பாடுகளை நிறுத்த முடியாது எனவும் உறுப்பினர் தெரிவித்தார்.

இதன்படி, நீதிமன்றத்தின் மற்றுமொரு தீர்ப்பு கிடைக்கும் வரை, முன்னர் கோரப்பட்ட வேட்புமனுக்களின் படி தேர்தல் நடவடிக்கைகள் தொடரும் எனவும் அவர் மேலும் கூறினார்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக இதுவரை 72 கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரச...

சந்தன அபேரத்ன இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

பணி நீக்கம் என்பது, வேலை வாய்ப்பில் இன்னொரு நெருக்கடி யையே ஏற்படுத்துமே தவிர, அதனால் தீர்வு எதுவும் ஏற்படாது எனவும் குறித்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், எதிர்காலத்தில் அரச சேவையில் ஆட்சேர்ப்பு செய்யும் போது உற்பத்தித்திறன் கவனிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் உற்பத்தித்திறன் அம்சத்தில் கவனம் செலுத்தாமல் தற்காலிக முறையில் பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்பு செய்தன. அது, எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, எதிர்வரும் காலங்களில் இலங்கையால் பாரிய அரச துறையை உள்வாங்க முடியாது எனவும், விரைவில் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க ஆரம்பிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்காக, நாட்டின் தற்போதைய 1.3 மில்லியன் ஊழியர்களின் எண்ணிக்கையில் இருந்து 750,000 ஊழியர்களாக அதன் பொதுத்துறை பணியாளர்களை குறைக்க வேண்டும் என்றும் சிரேஷ்ட ஜனாதிபதி ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ கூறியிருந்தார். (அ)

## வெளிநாட்டிலுள்ள...

முக்கியத்துவத்தை அறிந்து கொண்டு புதிய அரசாங்கம் கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு அமெ ரிக்க அரசாங்கம் பாரட்டுக்களை தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார, இலங்கையில் ஊழல் மற்றும் வீண் விரயம் தொடர்பில் அரசியல் கலசாரம் நேரடியாக தாக்கம் செலுத்துவதாகவும் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கி ஊழலையும் வீண் விரயத்தையும் மட்டுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும், புதிய தொழில்நுட்பத்தை அரச துறையில் அறிமுகப்படுத்தி தரமான அரச சேவையை உருவாக்க திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகே, இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங் யு.எஸ்.எயிட்டின் ஆசியாவுக்கான பிரதி உதவி நிர்வாகி அஞ்சலி கவூர், ஐக்கிய அமெரிக்க திறைசேரி திணைக்களத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலயங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரொத், யு.எஸ்.எயிட் தூதுக்குழுவின் பணிப்பாளர் கேப்ரியல் க்ராவ், அரசியல் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஆலோசகர் ஷோன் கிரே ஆகியோர் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# சுற்றுலாத்துறை வருமானத்தில் 20 வீதத்தை இழந்து வரும் அரசு!

கொழும்பு, டிசெ. 08

**இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளால் கிடைக்கும் வருமானத்தின் 20 சதவீதத்தை அரசு இழந்து வருவதாக கொழும்பு ஊடகம் ஊடகம் ஒன்று அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரஷ்யர்கள், சீனர்கள், இஸ்ரேலியர்கள் மற்றும் உக்ரேனியர்கள் இலங்கைக்குள் சுற்றுலா வழிகாட்டிகளாக பணி புரிவதால் இலங்கை அரசாங்கம் சுற்றுலாத்துறை மூலம் பெறப்படும் வருமானத்தில் 20 வீதத்திற்கும் அதிகமான தொகையை இழந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வழிகாட்டிகள் நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு செல்லிடப்பேசி பயன்பாடுகள் மூலம் அந்நிய செலாவணியை ஊக்குவித்து வருகின்றனர். இதனால் எமது நாட்டுக்குரிய அந்நிய செலாவணி கிடைக்கப்பெறவில்லை என்று அறியப்படுகின்றது.

இவ்வாறு சுற்றுலாத்துறையின் வருடாந்த வருமானமான 2 பில்லியன் டொலர்களில் மில்லியன் கணக்கான டொலர் பெறுமதியான அந்நியச் செலாவணியை எமது நாடு இழந்து வருகின்றது.

சிறிலங்கா சுற்றுலா சபையில் பதிவு செய்யப்படாத மற்றும் சீன குடிமக்களுக்கு சொந்தமான சுற்றுலா வழிகாட்டி சேவைகளை வழங்கும் 15 நிறுவனங்கள் உள்ளன.

ரஷ்ய மற்றும் உக்ரைன் குடிமக்களுக்கு சொந்தமான 50 முதல் 60 வரையிலான பயண சேவை நிறுவனங்கள் களுத்துறையில் இருந்து வெலிகம வரை அமைந்துள்ளன.

ஹோட்டல்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளை வெளிநாட்டு வழிகாட்டிகளும் சட்டவிரோத நிறுவனங்களும் 'டெலிகிராம்' செயலி மூலம் தொடர்பு கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டவர்களும் அவர்களுக்கு சொந்தமான நிறுவனங்களும் 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தை மீறிச் செயற்படுவதாக சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்கள் நிறுவகத்தின் தலைவர் ஜானக துனுசிங்க விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் நிலையான நாணய மாற்று முறைகளைப் பயன்படுத்தாமல் சட்டவிரோதமான முறையில் அந்த பரிவர்த்தனைகளை மேற்கொள்ள சுற்றுலா குழுக்கள் ஊக்குவிக்கப்படுவதால், பெரிய அளவிலான பரிமாற்றம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெளிவிவகார அமைச்சருடன் சுவிஸ் பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 08

சுவிஸ்சர்லாந்தின் வெளிவிவகாரங்களுக்கான பெடரல் திணைக்களத்தின் சமாதானம், மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கான இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லின் ஐந்து நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவர், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன்போது, உள்நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தினை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் ஆரோக்கியமான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ந்து இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வால்ட் மற்றும் பிரதித் தூதரகத் தலைவர் ஒலிவியர் ப்ராஸ் மற்றும் முதல் செயலாளர் ஜஸ்டின் பாய்லெட் ஆகியோர் அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (அ)

## விமல் தலைமையில் புதிய கூட்டணி?

கொழும்பு, டிசெ. 08

ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் அரசியலுக்கு தற்காலிகமாக விடை கொடுத்திருந்த விமல் வீரவன்ஸ, புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன எனவும், தேசிய சுதந்திர முன்னணி தலைமையிலேயே கூட்டணி அமையவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

தேசிய வாதிகள் மற்றும் இடதுசாரி தலைவர்களை கூட்டணிக்குள் உள்வாங்குவதற்கும், 'இலங்கையர்கள்" என்ற கொள்கையுடன் கூட்டணி பயணத்தை தொடர்வதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

## உப்பு இறக்குமதிக்கு அரசிடம் அனுமதி கோரும் நிறுவனங்கள்

கொழும்பு, டிசெ. 08

உப்பு இறக்குமதிக்கு அரசிடம் உப்பு நிறுவனங்கள் அனுமதி கோரியுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்காலத்தில் உப்புத் தட்டுப்பாடு வராமல் தடுக்கும் வகையில் சுமார் 20,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய உப்பு நிறுவனங்கள் அரசிடம் அனுமதி கோரியுள்ளன.

நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதால் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த சில நாட்களாக நிலவும் மோசமான வானிலையே இந்த உப்பு தட்டுப்பாட்டுக்கு காரணம் என உப்பு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அந்த நிறுவனங்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், மழை மற்றும் வெள்ளத்தால் உள்ளூர் உப்பு உற்பத்தி பாதியாக குறைந்துள்ளமை தெரியவந்தது.

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக அலிமங்கட, மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் பிரதான மதகுகளில் உப்பு உற்பத்தியில் பாதிக்கும் மேற்பட்டவை சேதமடைந்துள்ளதாகவும், புத்தளம் மதகுகளில் 80 வீதமான அறுவடை சேதமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தையில் உப்பு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க கடந்த 2 ஆண்டுகளில் ஏற்பட்ட பாதிப்புக்களை சரி செய்தாலும், அண்மைக்கால மோசமான வானிலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகரித்துள்ளதால், ஓரளவு உப்பு பற்றாக்குறையை ஈடுகட்ட இறக்குமதி செய்ய வேண்டும்.

மேலும், நுகர்வு மற்றும் இதர தொழில்களுக்கு உப்பு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் உப்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்தியாவிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு கோரிக்கை!

கொழும்பு, டிசெ. 08

இந்தியாவிலிருந்து 20,000 மெற்றிக் தொன் வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு வெங்காய நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் பாரியளவு வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசிக்கான தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யு.கே. சேமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் அரிசி இறக்குமதி விடயத்தில் அசமந்த போக்கில் செயற்பட்டுள்ளது.

தற்போது கட்டுப்பாட்டு விலையில் சதொச ஊடாக அரிசி வழங்கப்பட்டாலும், அங்கு வழங்கப்படும் அரிசி தொகை போதுமானதாக இல்லை.

அரிசிக்கான தட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியில் அரசாங்கம் விரைவாகச் செயற்பட்டு அரிசியை இறக்குமதி செய்திருக்கவேண்டும்.

அரசாங்கம் ஏதேனும் சில காரணங்களுக்காக அரிசியை இறக்கமதி செய்யவில்லை என்பது புலப்படுவதாக இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யு.கே. சேமசிங்க கூறினார். (அ)

## மின் கட்டணம் குறைக்கப்படுமா?

கொழும்பு, டிசெ. 08

மின் கட்டணம் எவ்வளவு குறைக்கப்படும் என்பது தொடர்பான இறுதிக் கணிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கான திருத்தப்பட்ட பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளதாகவும், இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மின்சார சபை தெரிவித்திருந்தது.

இலங்கை மின்சார சபையினால் மின்சார கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதமே இந்த வருடம் மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் எனவும், இதனால் மின் கட்டண திருத்தம் அடுத்த வருடம் வரை ஒத்திவைக்கப்படுவதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்திருந்தார்.

மின் கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவுகள் இலங்கை மின்சார சபையினால் கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், முன்வைத்துள்ள மின்சாரக் கட்டணக் குறைப்பு போதாது என்பதால் மீண்டும் முன்மொழிவுகளை மீள் திருத்தம் செய்து சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்திருந்தது.


பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நவம்பர் 8 ஆம் திகதிக்கு முன் குறித்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்திருந்த போதிலும், மின்சார சபை அன்றைய தினம் முன்மொழிவை சமர்ப்பிக்க தவறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட இதேவேளை, நவம்பர் 22 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குமாறு மின்சார சபை கோரியிருந்ததாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையிலே டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை இலங்கை மின்சார சபைக்கு கால அவகாசம் வழங்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ)

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்!

### சகாக்களுக்கு சஜித் உத்தரவு

கொழும்பு, டிசெ. 08



உள்ளூராட்சித் தேர்தலை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்கு கிராம மட்டங்களில் ஆழமாக காலூன்ற வேண்டியுள்ளது எனவும், இதற்கான தயார் படுத்தல்களை மேற்கொள்ளுமாறும் கட்சி சகாக்களுக்கு எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆலோசனை வழங்கியுள்ளார்.

கீழ்மட்ட அரசியல் இயந்திரம் வலுவாக இருப்பதாலும், ஏற்பாட்டு சக்தி பலமாக இருப்பதாலுமே தேசிய மக்கள் சக்தியால் ஆட்சியை பிடிக்க முடிந்தாகவும், எனவே, கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தை கட்டாயம் வலுப்படுத்தியாகவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், உள்ளூராட்சித் தேர்தல் பற்றி ஆராயப்பட்ட வேளையிலேயே மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசியல் களத்தில் தேசிய மக்கள் சக்தியே தமது அணிக்குள்ள பிரதான அரசியல் எதிரியெனவும், அந்த எதிரியைவிட வலுமான திட்டங்களை வகுத்தால் முன்னோக்கிச் செல்ல முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org